# முரசொலி

— வார இதழ் —

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 18–10–57 வெள்ளி | ஒலி 26


## இந்"தீ"-வென்றுவிட்டால்...

# வான வீதியிலே...

**கற்பனை உரையாடல்**

[ரஷ்யர்களால் சுடப்பட்ட செயற்கைச் சந்திரன் வான வீதிக்குச் சென்றவுடன், எல்லா கிரகங்களும் கூடிப் பேசுகின்றன. "செயற்கைச் சந்திரனை சொர்க்க உலகத்தினுள்ளே விடமாட்டோம்!" என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுகின்றன. ஆனால் செயற்கைச் சந்திரன் அஞ்சாத நெஞ்சத்துடன் உயரே செல்கிறது! போகும் வழியிலே இயற்கைச் சந்திரனைச் சந்திக்கிறது.]

செயற்கை மதி: வணக்கம் சந்திர பகவானே! என்னை அருள் கூர்ந்து ஆசீர்வதித்து உங்கள் கிரக குடும்பத்தில் ஒருவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!

இயற்கை மதி: ஓகோ!...வாடியம்மா! ரஷ்யாவிலிருந்து வந்திருக்கிறாயாக்கும்!......வந்தவுடனே என்னவோ கிண்டல் செய்கிறாயே!

செயற்கை மதி: அபசாரம்! அபசாரம்! நான் கிண்டல் செய்கிறேனா? கடவுளைக் கிண்டல் செய்யலாமா? இந்தியாவிலுள்ள மக்கள் உன்னைக் கடவுளாகக் கருதி வழிபடுகிறார்கள்! ஆதலால்தான் நானும் பக்தியோடு வணங்கினேன்! பிரபுவின் மனதை அது புண்படுத்தியிருந்தால்...அதற்கும் மன்னிப்பு கோருகிறேன்!

இ. மதி: அம்மா! நீ குறும்புக்காரிதான் போலிருக்கிறதே! சிறிய பந்துபோல் இருந்து கொண்டே இவ்வளவு அரட்டை அடிக்கிறாயே! ஆமாம்.. இந்தியர்களின் முட்டாள்தனமாகச் செயல்களுக்கு நானா பொறுப்பாளி? ...அதோ பார்! இந்தியாவின் தென் பாகத்திலே உள்ள புண்ணிய ஸ்தலமான திருவையாறு கோவிலின் முன்னே சில பக்தர்கள்கூட உன்னை 'பைனு குலர்' மூலம் பார்க்கிறார்களே! அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்களெனச் சற்று கவனிக்கலாம்! இங்கே வந்து பாரேன்!

[திருவையாறு கோவிலின் முன்னே, ஓர் அம்மாமி "பைனு குலர்" மூலம் செயற்கைச் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவளருகே 'எழிலரசி' என்ற படித்த யுவதியும் நின்று கொண்டிருக்கிறாள்.]

எழிலரசி: பந்துபோல சிகப்பாகத் தெரிகிறதல்லவா? அது தானம்மா செயற்கைச் சந்திரன்!

அம்மாமி: ஆமாண்டி கண்ணு! இந்தக் குட்டிக் கிரகம் நவக்கிரகங்களில் எந்தக் கிரகத்தினுடைய குழந்தையோ?

எழிலரசி: (சிரித்துக் கொண்டே) இல்லையம்மா! நவக்கிரக காலமெல்லாம் என்றோ மறைந்து விட்டது! இன்று பதினோரு கிரகம் வான வீதியில் உள்ளதாகக் கண்டு பிடித்து இருக்கிறார்கள்! இந்தக் குட்டிக் கிரகம், ரஷ்யர்களால் அனுப்பப்பட்டு இப்பொழுது பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு சிறு சுழலியாகும்!

அம்மாமி: அப்படியானால் கோவில்களில் ஒன்பது கிரகங்கள்தானே உள்ளன! நம் வீட்டிலிருக்கும் பஞ்சாங்கத்தில்கூட "பிரதி தினமும் பூஜிக்கும் சக்கரம்" எனத் தலைப்பிட்டு ஒன்பது கிரகங்கள்தானே இருக்கின்றன! ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட புதிய கிரகத்தினால் நம் பஞ்சாங்கத்தை மாற்ற வேண்டுமே!

எழிலரசி: (சிரித்துக் கொண்டே) ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட புதிய செயற்கைச் சந்திரனின் சஞ்சாரத்தைக் கொண்டு கவனிக்கு மிடத்து என் அருமை அம்மாவுக்கு சிறிது நேரத்தில் அஜாக்கிரதையினால் நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

அம்மாமி: போடீ, குறும்புக்காரி! அதோ அந்தக் கிரகம் மறையப் போகிறதடீ! கன்னத்தில் போட்டுக்கோடீ! சிக்கிரம் கன்னத்தில் போட்டுக்கோ! அது மறைந்து விடப் போகிறது!



(அம்மாமி கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள்! மறதியாக அவள் கையிலிருந்த "பைனு குலர்" கீழே விழுந்து சுக்கு நூறாக உடைகிறது!)

அம்மாமி: அடேடே!... நீ சொன்ன ஜோசியம் பலித்து விட்டதே! புதிய சந்திர பகவானே! என்னை மன்னித்து விடு! எங்கள் குடும்பத்துக்கு ஒரு கெடுதியும் வராமல் நீ தான் பாதுகாக்க வேண்டும்!

[அம்மாமி மறுபடியும் கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள். எழிலரசி உடைந்து கிடக்கும் பைனு குலரைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறாள். அதைப் பார்த்த இயற்கைச் சந்திரனும் செயற்கைச் சந்திரனும் சிரிக்கின்றன!]

இயற்கை மதி: பார்த்தாயா அந்த மதிகெட்ட இந்தியர்களை! விரைவில் உனக்கும் அங்கு ஒரு கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்தாலும் செய்வார்கள்! 'ரஷ்யாவின் புதிய சந்திரனால் திருத்தப்பட்ட பஞ்சாங்கத்தை' விரைவில் சில பத்திரிகைகளில்கூட நீ பார்க்கலாம்! ...அடடே! மறதியாக உன்னுடன் பேசிக் கொண்டே இருந்து விட்டேனே! மற்ற கிரகங்களெல்லாம் உன்னை சொர்க்க லோகத்தைவிட்டு வெளியேற்றத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள்! உன்னோடு நான் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டால் என்னையும் வெறுக்க ஆரம்பித்து விடுவார்கள்!

செயற்கை மதி: நன்றாக இருக்கிறதே உங்கள் வரவேற்பு! வெளி உலகத்தாரை இப்படித்தான் வரவேற்பதா? விரைவில் என்நாட்டு மக்களெல்லாம் உன்னைக் காண வரப்போகிறார்களே!

இ. மதி: எங்கள் உலகத்தில் எந்த அந்நியனையும் அனுமதியோம்!

செ. மதி: நீ யார் எங்களை அனுமதிக்க? அறிவியலின் உதவியால் எதையும் எங்களால் சாதிக்கமுடியும்!

இ. மதி: வானவீதிக்கு வந்தவுடனே மிகவும் துள்ளிக் குதிக்காதே அம்மா!

செ. மதி: நான் ஏன் துள்ளிக் குதிக்கிறேன்? ஆனால் நான் வந்ததினால் உன் உள்ளம் தான் பொறாமைத் தீயால் பற்றி எரிகிறது போலும்!

இ. மதி: பூ! நீ இருப்பதை உலகத்திலுள்ளவர் சாதாரணமாகப் பார்க்கக்கூட முடியாது! இந்தச் சிறுமியைப் பார்க்க 'பைனு குலர்' வேறு வேண்டுமாம்!

செ. மதி: அப்படியெல்லாம் மட்டமாகப் பேச வேண்டாம், சந்திர பகவானே! நான் குள்ளமாக இருந்து கொண்டே, இங்கிருக்கும் வெப்ப தட்ப நிலை அழுத்த, மற்றும் இயற்கையமைப்பைப்பற்றி ருஷ்யாவுக்கு செய்தி அனுப்பிக் கொண்டிருக்கிறேனே!

இ. மதி: வானவீதிக்கு ஒற்றனாக வந்திருக்கிறாய் போலிருக்கிறதே! ஏதாவது உண்மைக்குப் புறம்பான செய்திகளையனுப்பினால்......பிறகு என்ன நடக்குமென்பது தெரியாது! ஆமாம்!

செ. மதி: என்ன பகவானே, மிரட்டுகிறீர்! என்னை சபித்து விடாதீர்கள்! விரைவில் ரஷ்யர்கள் ராக்கெட் மூலம் உன்னைத் தவிடுபொடியாக்கி விடுவார்கள்! என்னைக் கண்டே இவ்வளவு பொறாமைப்படுகிறாயே! கூடிய சீக்கிரம் பெரிய சந்திரன் வரப் போகிறான்! ருஷ்யர்களும் வரப் போகிறார்கள்! பார்க்கலாம், உங்கள் சொர்க்க வாசலின் கதவு திறந்திருக்கிறதா; அல்லது கதவை மூடி அவர்களை நரகத்துக்கு அனுப்பப் போகிறீர்களாவென்பதை!

இ. மதி: அடேடே! செயற்கை இயற்கையை வென்றுவிட முடியுமெனக் கனவு காண்கிறாயா? ஒருக்காலும் முடியாது!

செ. மதி: "செயற்கை இயற்கையோடு சண்டை போட்டால் உலகமே அழிந்துவிடும்!" என்றுதான் விஞ்ஞானிகள் சிந்திக்கிறார்கள்! இல்லாவிட்டால் இயற்கையை வெல்ல செயற்கையால் முடியும்! நிச்சயம் முடியும்! முடியுமென்பதை நீ விரைவில் காணத்தானே போகிறாய்! உன் உலகத்தில் குடியிருக்க எங்கள் நாட்டு மக்கள்தான் விரைவில் வரப் போகிறார்களே!...ஏன் உன்னுடன் வீண் வாதம்?...நீ என்னுடைய நண்பனாக இருக்க விரும்புகிறாயா? அல்லது விரோதித்துக் கொண்டு ருஷ்யர்களின் பறக்கும் குண்டிற்குப் பலியாக விரும்புகிறாயா?

[இது கேட்ட இயற்கைச் சந்திரனின் முகம் கோபத்தால் சிவக்கிறது! அது தன் பாதையிலே வேகமாகத் துள்ளிக் குதித்துச் செயற்கைச் சந்திரனைக் கீழ் நோக்கித் தள்ளுகிறது! செயற்கைச் சந்திரன், "ஐயோ! என்னைக்கொன்று விடாதே!" எனக் கத்திக் கொண்டே பூமியை நோக்கி ஓடுகிறது! இப்பொழுது அது இயற்கைச் சந்திரனுக்குப் பயந்து கொண்டு பூமியிலிருந்து 150-வது மைலிலே சுற்றிக் கொண்டிருக்கிறது.]

—"இன்பபுரியான்"

## திருச்சியில்
## பீடி, சுருட்டுத் தொழிலாளர் மாநாடு

13—10—57 காலை 9-மணிக்கு திருச்சி பீடி, சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் முதலாவது மாநாடு திருச்சி தேவர் மன்றத்தில் எம். கே. எம். அப்துல் சலாம் எம். பி. தலைமையில் நடைபெற்றது. காலை 8-மணிக்கு சவுக் மைதானத்திலிருந்து தொழிலாளர்கள் அனைவரும் ஊர்வலமாகப் புறப்பட்டு வந்தனர். மாநாட்டை சேலம் சிற்றுளி சுப்ரமணியம் திறந்து வைத்தார். எஸ். ஏ. ஜி. ராபி கொடியேற்றி வைத்தார். செயலாளர் எம். எஸ். மணி எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

தோழர்கள் மு. கருணாநிதி, பி. ஆர். இராமசாமி, எஸ். ஜி. கிருஷ்ணன், ஐ. எம். ஹரிப், தோழியர் தேசியமணி (வேலூர்) ஆகியோர் பீடி, சுருட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினை குறித்துப் பேசினார்கள். பின் ஒன்பது தீர்மானங்கள் நிறைவேறின.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தும், பீடித் தொழிலில் நடைபெற்று வரும் 'பிராஞ்சு' முறைகளை ஒழித்து 'பாக்டரி' சட்டத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்றும், அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் 'கமிட்டி' நியமித்து விசாரிக்க வேண்டும் என்றும், 'பிராவிடென்டு பண்டு' வசதி அளிக்கவும, அதை கண்காணிக்க தனி அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும், பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் உருவாக்குகிற 'கமிட்டி'யில் தொழிற் சங்க பிரதிநிதிகளை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், பீடி, இலை, புகையிலை ஆகியவைகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய கூட்டுறவு விற்பனை நிலையங்கள் திறக்க வேண்டுமென்றும், மேற்படி தொழிலைத் தேசிய மயமாக்க அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியும் தீர்மானங்கள் நிறைவேறின.

வெள்ளி 18—10—57 சென்னை

# இலங்கை ரத்ன உத்தரவு!

இலங்கை இந்தக் கிழமை மீண்டும் பத்திரிகைகளிலே அடிபடுகிறது.

பதவி வகிக்கும் பண்டாரநாயகா சேனநாயகாவைப்போல் அல்லாமல் முதுகெலும்பு உள்ளவராக நிமிர்ந்து நின்று; தனது நாட்டிலே அன்னியத் திட்டாகவும் அவமானச் சின்னமாகவும் இருந்து வந்த திரிகோணமலை ஆங்கிலேயர் கடற்படைத் தளத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

பாராட்டுகிறார்கள்—ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள்!

ஆங்கிலேயர் தங்களுடைய தளத்தை இலங்கையிலே அமைத்துக் கொண்டிருப்பதானது, நாளை ஆங்கிலேயர் அங்கிருந்துகொண்டு செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் இலங்கையையும் பங்காளியாக்கி விடக்கூடும்.

மேலும் திரிகோணமலையிலேயுள்ள தளமானது, இப்போது வல்லரசுகளிடையே நடைபெற்று வரும் கெடுபிடி யுத்தத்திற்கு இலங்கையையும்—அது விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஓர் உடன்பாடு கொண்ட நாடாகவும் மாற்றி விடும்!

இவைகளுக்கெல்லாம் முடிவு கட்டும் விதத்திலும்; தனது நாட்டின் சுதந்திரத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் காப்பாற்றிக் கொள்ளும் வகையிலும் திரிகோணமலையில் இருந்த அன்னியர் தலையீட்டின் நிரந்தரச் சின்னத்தைத் தவிடு பொடியாக்கி விட்டார்.

—பண்டார நாயகாவையும், இவ்வளவு துணிவான முடிவிற்கு அவருக்கு முழு ஆதரவு நல்கிய அவரது கட்சியையும் பாராட்டுகின்ற இதே நேரம் மேலை நாட்டு ஆதிக்கத்தின்பால் இவ்வளவு எதிர்ப்பு காட்டுபவர், தனது ஆசியச் சகோதரனிடத்தில் அன்பு காட்டத் தவறிவிட்டாரே—என்று நினைக்குங்கால் நமக்கெல்லாம் அவர் ஒரு புரியாத புதிராகவே விளங்குகிறார்.

இலங்கையிலே தமிழருக்கு இழைக்கப்படும் அநீதி சிங்கள வெறியர்களின் கோரத் தாண்டவம் தினந்தினமும் கொடுமையின் உச்ச கட்டத்தை நோக்கிப் பீடு நடை போடுவதாகத்தான் இருக்கிறது.

சமீபத்தில் தொழிலாளர் விவகார அமைச்சர் திரு. இலங்கை ரத்ன அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவு இவற்றிற்கெல்லாம் சிகரம் வைப்பது போலிருப்பதை நம்மால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

மலைத் தோட்டங்களிலே பணியாற்றிவரும் எண்ணிறந்த தமிழர்களுக்கெல்லாம் இப்போது சாவுமணி அடிக்கப்படுவதைத் தான் இலங்கை ரத்ன உத்தரவு நமக்கு அறிவிக்கிறது.

அவரது உத்தரவின்படி இனிமேல் தமிழர்கள் முன்புபோல் தங்களைத் தோட்டத் தொழிலாளர்களாகக் கடினமின்றிப் பதிவு செய்து கொள்ள முடியாது.

"பெரும்பான்மை 'இந்தியத் தொழிலாளர்கள்' இல்லாத தோட்டங்களில் காலியாகும் எல்லா இடங்களுக்கும் இனி சிங்களவரே நியமிக்கப்பட வேண்டுமாம்.

பெரும்பான்மை இந்தியத் தொழிலாளர்கள் பணியாற்றும் தோட்டங்களில் காலியாகும் இடங்களில் பாதிக்கு 'இந்திய'ரையும், இன்னொரு பாதிக்கு சிங்களவரையும் தான் நியமிக்க வேண்டுமாம்.

—இலங்கை ரத்ன உத்தரவின் சாரம் இது!

இந்த உத்தரவு வருவதற்கு முன்புதான் தோட்டத் தொழிலாளிகளாய் இருக்கும் தமிழர்களது நிலைமை என்னவென்று நினைக்கிறீர்கள்?

இலங்கை ரத்ன பகிரங்கமாக உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னரே மறைமுகமாக 'வேலை நீக்கப் படலம்' நடைபெற்றுத்தான் வந்திருக்கிறது.

அப்போதே தோட்டத்து அதிகாரிகள் பெரும் அளவில் தமிழர்களைத் தொழிலாளிகளாகப் பதிவு செய்துகொள்ள மறுத்து வந்திருக்கிறார்கள்.

புதிதாகத் திருமணம் புரிந்து கொண்ட பெண்களுக்கும் "இல்லை" என்கிற பதில்தான் சுலபமாகக் கிடைத்திருக்கிறது.

—இதனால் ஒவ்வொரு தொழிலாளியும், தனது குடும்பத்தில் வேலையற்ற பலரையும் பராமரித்துத் தீரவேண்டிய பரிதாபமான நிலைமை உருவாகி யிருக்கிறது.

—இதில் வேடிக்கை என்னவென்றால் இலங்கைவாழ் 'இந்தியரு'க்கு இவ்வளவு இன்னல் விளைவிக்கும் திட்டத்தை அமைச்சர் இலங்கை ரத்ன அங்குள்ள இந்தியப் பிரதிநிதியிடம் எடுத்துக்காட்டி இதனால் 'இந்தியர்கள்' பாதிக்கப்படமாட்டார்கள் என்று, உறுதி கூறியதை அவர் அப்படியே முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு விட்டாராம்.

சிங்களவர்கள் பலர் வேலையில்லாக் கொடுமையால் அவதிப்படுவது உண்மையாக இருக்கலாம்.

ஆனால் அதே வேலையில்லாக் கொடுமை அங்குள்ள 'இந்திய வம்சாவழியினரை'த் தாக்கினால் அவர்கள் மட்டும் அவதிப் படாமல் இருப்பார்களா? சிங்களவருக்கு இருக்கும் வாயும் வயிறும் இவர்களுக்கு இல்லாமலா போய்விடும்?

—இதையெல்லாம் எடுத்துச் சொல்லாமல் அங்கிருக்கும் இந்தியப் பிரதிநிதி இலங்கை ரத்ன கொடுத்த உறுதிமொழியை எப்படி நம்பினார்!

—இந்த இடத்தில்தான் நாம் சிறிது சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

இலங்கை ரத்னவின் உத்தரவினால் அவதிப்படும் 'இந்தியர்'களும்; இந்தியாவின் பிரதிநிதியாய் அங்கு வீற்றிருக்கும் இந்தியரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல!

அங்கே அல்லல்படுவோரில் பெரும்பாலோர் தமிழர்கள்; தென்னாட்டவர்கள்!

இந்த வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவரோ வடநாட்டுக்காரர்; வடநாட்டுக்காரரால் அனுப்பப்பட்டவர்!

இலங்கையில் மட்டுமல்ல; இருபத்தேழு வெளி நாடுகளில் குடியேறி கொடுமைக்கு ஆளாகியிருப்பவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்தான்.

குஜராத்தி மொழி பேசுவோர் அந்த **27** நாடுகளிலே **2,37,552** பேர்தான் இருக்கிறார்கள்!

பஞ்சாபி பேசுவோர் தொகையோ **97,073**!

சிந்தி மொழி பேசுவோர் தொகை **15,166** தான்!

பெங்காலி மொழி பேசுவோர் **4,073** பேர் மட்டுமே இருக்கிறார்கள்!

இந்தி—இந்துஸ்தானி—உருது மொழி பேசுவோர் தொகை, முழுவதையும் கூட்டிப் பார்த்தால்கூட அவர்கள் எண்ணிக்கையில் **4,55,745** பேராகத்தான் இருக்கிறார்கள்!

ஆனால் தமிழ் மொழி பேசுவோரோ இவர்கள் எல்லோரையும் விட அதிகமாக இருக்கிறார்கள். **27** நாடுகளிலே வதிந்துகிடக்கும் அவர்கள் தொகை **4,81,628**!

—இது பர்மா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா, டிரினிடாட்—போன்ற நாடுகளிலே வாழ்வோரின் எண்ணிக்கையைத் தவிர்த்த கணக்கு!

—இவ்வளவு அதிகம் பேர் இருக்கிறோம்; அதனால்தான், அதிகமாக அவதிப்படுகிறோம்!

தமிழர்களின் பிரச்சினைகளையும்; தமிழர்களின் உள்ளக் கிடக்கையையும் உணர்ந்த தமிழர் ஒருவர் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக வீற்றிருந்தால் சிக்கல்கள் இவ்வளவு தூரம் வளர்வதைத் தவிர்த்திருக்கலாம்.

அவர், 'இந்திய'ராக இருப்பதால் தமிழர்கள் அவதிப்படுவதை அவரால் உணர்ந்து பரிகாரம் காண முடியவில்லை!

இந்த 'இந்தியர்' இடத்திற்கு தமிழர் வராதவரை இலங்கைத் தமிழரின் இழி நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டுவிடும் என்பதை நாம் நம்புவதற்கில்லை.

# தாய்மொழி அறிவு வேண்டுமாம்; ஆனால் இந்தி திணிக்கப்படுமாம்!

அக்டோபர் 13, "கட்டு மலர்க் கொத்தேபோல் இனிமை தேக்கிக், கரந்த மொழி தமிழாகும் நம்மதாகும்" என்று தலை நிமிர்ந்து கூறும் பேறு பெற்ற தமிழ் நாடு போர்க்கோலம் பூண்டது. 'இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா?' என்ற புரட்சி கேள்வி உருவில் கிளம்பி 'எல்லோரும் வாருங்கள் தோழர்களே!' என்று அழைப்பு விடுத்து, 'செந்தமிழ்க்கே தீமை வந்த பின்னும் இந்த தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ!' என்று சூளுரைத்து, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை —நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்பதை மனதில் கொண்டு, 'இந்திக்குச் சலுகை தந்திடும் அந்த ஈனரைக் காறி உமிழ்ந்திடுவோம்' என்று 'தாளமிடும் ஓலமிடும் நரி'களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, 'பங்கம் விளைந்திடில் தாய் மொழிக்கே உயிர் பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்' என்று புயல் கிளப்பி, முரசொலித்து, கிளர்ந்தெழுந்தது தமிழ்ச் சிங்கக் கூட்டம்! அங்கிங்கெனாதபடி எங்கும் இந்தி ஆதிக்கம் குறித்து பேசப்பட்டது. ஆள்வோர்க்கு 'இறுதி இது' என்று கூறி எச்சரிக்கையும், தமிழ் பேசி வாழ்வோர்க்கு மொழி காக்க அழைப்பும் விடப்பட்டது. படை வளர்கிறது. பலமும் பெருகுகிறது. ஆச்சாரியார், டாக்டர் சுப்பராயன், டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை, காசா சுப்பாராவ் போன்ற தலைவர்களும் தமிழ்ப் புலவர்களும் இன்று, இந்தி மொழி ஆதிக்கத்துக்கு எதிர்ப்புக் குரல் கிளப்புகின்றனர்.

நாம் இங்கே எதிர்ப்புக் குரல் கிளப்பிய அக்டோபர் 13-ல் இந்திய முதல்வர் பண்டிதர் நேரு அவர்கள் ஜப்பானிலே வலம் வந்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அவரை 'இரண்டாவது காந்தியார்' என்று ஜப்பான் நாட்டு முதியவர் ஒருவர் போற்றிப் புகழ்ந்திருக்கிறார். பண்டிதரும் காந்தியார் விரும்பிய 'இந்துஸ்தானி' மொழியில் (இந்தியில் அல்ல) ஒரு சொற்பெருக்கு ஆற்றி அதன் கடைசிப் பகுதியை ஆங்கிலத்தில் முடித்திருக்கிறார். பிரிட்டன் ஆதிக்கம் இந்தியாவை விட்டுப் போகின்றபொழுது பல நல்ல அரசியல் தத்துவ அடிப்படைகளைத் தந்துவிட்டுப் போனதாகக் கூறியிருக்கிறார். அதோடு ஆங்கிலத்தைப் பற்றி குறிப்பிடும்பொழுது "ஆங்கிலம இந்தியாவிற்குச் சிற்றன்னை போன்றது" என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் அந்த வளம் நிறைந்த மொழி, அதைத் தாய் மொழியாக் கொண்டு வாழ்வோர் தொகை இந்தியாவில் கணிசமான அளவுக்கு இருந்தும்கூட இந்த நாட்டின் மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படவில்லை. நல்ல பல முறைகளில் இந்தியாவை வளர்த்தது என்று பண்டிதரால் பாராட்டப்படும் ஆங்கிலம் 'இந்தியா வளர்ந்து விட்டது' என்ற எண்ணம் உருவான பிறகு தூக்கி எறியப்படுவது என்பது வேதனையானது; நல்லோரார் விரும்பத் தகாதது.

அக்டோபர் 12-ல் திரு. ஹன்ஸ்ராஜ் என்ற ஒரு இந்தியர் ஜப்பானில் பண்டிதர் நேரு அவர்களிடம் 'இவள் ஆங்கிலம் மட்டுமேதான் பேசுவாள்' என்று கூறி தன் மகளை அறிமுகப் படுத்தியிருக்கிறார். பண்டிதரின் பாராட்டுகளை எதிர்பார்த்து நின்ற அந்த 'பாரதத்து வாசி' பண்டிதரின் கோபத்துக்கு ஆளாகியிருக்கிறார்:

"நீங்கள் வாழ்க்கையின் அடிப்படை பிரச்சினையில் கவனம் செலுத்த வில்லை என்பது மிக வருந்தத் தக்கது. ஒரு குழந்தைக்குத் தாய் மொழியில் போதிய அளவு அறிவு இல்லை என்றால் அது நிச்சயமாக அக் குழந்தையின் எதிர்காலத்தைப் பாதிக்கும். மற்ற நாடுகளிலே வாழுகின்ற பிற நாட்டவர்களெல்லாம் தங்கள் குழந்தைகட்கு தாய் மொழிக் கல்வி தர போதிய வசதிகள் செய்துள்ளனர்!"

இப்படி தாய் மொழியின் சிறப்பையும் அதைக் கற்க வேண்டிய தேவையையும் மிக நன்கு விளக்கியுள்ளார். மகிழ்கிறோம். ஆனால் அவர் தாய்மொழி என்று குறிப்பிடுவது எதை என்பது மறுநாள் சொற்பொழிவிலேதான் தெற்றெனத் தெரிகிறது:

"இந்தியக் குழந்தைகள் சிலருக்கு இந்துஸ்தானி தெரியாது என்பதறிய மிக வருந்துகிறேன். அவர்கள் அவர்களுடைய சொந்த மொழியை படிக்காமலிருப்பது நல்லதல்ல. அவர்கட்கு இந்துஸ்தானி தெரியாவிட்டால் அவர்கள் மீண்டும் இந்தியா செல்கின்ற பொழுது அந்நியராகின்ற நிலை ஏற்படும். எனவே இங்கே வாழுகின்ற நீங்கள் உங்கள் குழந்தைகட்கு இந்துஸ்தானியும், இந்திய வரலாறும் கற்றுத் தருவதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள். இந்திய வரலாற்றையும், வளர்ச்சியையும், தற்கால முன்னேற்றத்தையும், இந்துஸ்தானி மொழியையும் இந்தியக் குழந்தைகளும், ஜப்பானியக் குழந்தைகளும் படிக்கின்ற வகையில் சிறு நூலகங்களையும் படிப்பகங்களையும் உருவாக்குங்கள்," என்று பண்டிதர் நேரு ஆற்றிய சொற்பொழிவு இந்தியர்களின் தாய் மொழியே இந்துஸ்தானி என்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

அதோடு, இந்தியா, இந்துஸ்தானியா என்ற கேள்வி, இந்திதான் என்று விடை தரப்பட்டு, அதுவும் 'தேவநாகிரி எழுத்தில் எழுதப்படும் இந்தி' என்று தீர்மானமாகக் கூறிவிட்ட பிறகு, அந்த இந்தியை ஏற்காதோர் மத்தியிலும் திணிக்க மேற்பட்டு பணியாற்றுகின்ற நேரத்தில் பண்டிதர் 'இந்துஸ்தானி' என்று குரல் கிளப்புகிறார். இந்தியர்களின் தாய்மொழி இந்துஸ்தானி என்று அவர் கூறுகின்ற நேரத்தில் இதுகாறும் நம் உள்ளத்தில் ஆட்சி செலுத்தி வந்த ஓர் எண்ணம் முழு உருப் பெறுகிறது. பல்வேறுபட்ட இன மக்களையும் கதர் நூலால் கட்டிக் காத்து வருகின்ற அவர்கள் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தையும், அங்கே இந்துஸ்தானி தவிர வேறு மொழியே இல்லை என்ற நிலையையும் உருவாக்கத் திட்டமிட்டுப் பணியாற்றுகின்றனர். எனவேதான் இந்தியை எதிர்த்து வங்கமும் மராட்டியமும், பஞ்சாபும், அசாமும் குரல் கிளப்புகிறது. இச் சொற்பொழிவு இந்திய மொழிகளாகக் கருதப்பட்டு அவர்களாலேயே இந்திய அரசியல் சட்டத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ளன! பதின்மூன்று மொழிகளையும் பார்த்து எண்ணி நகையாடுவதாகவே அமைந்திருக்கிறது.

எனவே பண்டிதர்க்கு அவர் முன்பொருமுறை டில்லிபாராளு மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவை நினைவூட்ட விரும்புகிறோம். இந்திய அரசினரின் மொழிக் கொள்கை ஒரு 'குழப்பம்' என்பதை அவர் முன்னைய பேச்சுக்கும் இன்றைய உரைக்கும் அரசாங்கத்தினர் செயலுக்கும் இடையே உள்ள வேற்றுமைகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

"மொழி தனி மனிதன் வாழ்க்கையில் மட்டுமல்ல; ஒரு சமுதாயத்தின், இன மக்களின் வாழ்க்கையிலேயும் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. எனவேதான் சொல்லுகிறேன், இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மொழிப் பிரச்சினையில் நாம் ஈடுபடும்போது நன்றாகச் சிந்தித்து, முற்ற முடிய எல்லா விளைவுகளையும் சீர்தூக்கி வைத்து, எண்ணிப் பார்த்து, பிறகுதான் செயலில் இறங்கவேண்டும்... நமக்கு 'மஜாரிட்டி' பலம் இருக்கிறது என்ற தைரியத்தினால் விருப்பமில்லாத மக்கள்மீது இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக வைத்தால் விளைவு, நாம் விரும்புவதற்கு நேர் மாறானதாகவே முடியும் என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன்.........இந்தியாவுக்குப் பொதுமொழி தேவை என்பதற்காக எந்த மொழியையும் நாம் வலுக்கட்டாயமாக எவர் மீதும் திணிப்பதென்பது நிச்சயமாகக் கூடாது," என்று 8-11-1948-ல் டில்லி பாராளு மன்றத்தில் பண்டிதர் நேரு பேசியுள்ளார்.

ஆனால் இன்று இந்தி ஆதிக்க மொழியாக, மக்களின் விருப்பு வெறுப்புக்களைச் சட்டை செய்யாமல் நாட்டிலே புகுத்தப்படுகிறது. அன்று அவர் பேசிய பேச்சுகள் நீர்மேல் வரைந்த எழுத்துக்களாகிவிட்டன.

இதற்கிடையே தேவநாகிரி எழுத்துக்களாலேயே மற்ற மொழிகளும் எழுதப்பட வேண்டும் என்ற கருததை இந்தியக் குடியாட்சித் தலைவர் எல்லா இடங்களிலும் மறக்காமல் எடுத்துக் கூறி வருகிறார்கள். 'இந்தி படிப்பதற்கு எளிது; படியுங்கள்' என்று இங்குள்ள இராஜாராம் நாயுடுகள் இந்திக்கு விளம்பரம் தேடுகின்றனர். 'பிற மொழிகளின் வரவால் தமிழ் வளரும்' என்று நமது கல்வியமைச்சர் ஆதரவு காட்டுகிறார். கதர்த் திரையின் பின்னாலே மிகப் பெரிய சூழ்ச்சி ஒன்று உருவாகிறது. அந்த சூழ்ச்சிச் சூளில் பிறந்த முதற் குழந்தைதான் 'பொது மொழிக் கொள்கை'! சுருங்கச்சொன்னால் கெடுவது காட்டும் அறிகுறிகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன."

மற்ற எல்லா பிரச்சினைகளையும்விட மொழிப் பிரச்சினை இந்திய அரசாங்கத்தின் குழம்பிய நிலையை எடுத்துக் காட்டுகிறது. தேசிய மொழி எவை? அரசாங்க மொழி எவை?... ஆங்கிலம் வேண்டுமா, அறவே வேண்டாமா? பொது மொழி இந்தியா, காந்தியார் கூறிய

[தொடர்ச்சி பக்கம்—12]

சிறிது தூரம் வரையில் தான் புவனாவும் அந்தப் புதிய மனிதரான சாதுவும் ஒருவரோ டொருவர் பேசிக் கொள்ளாமல் சென்றனர். ஆபத்தான நிலையில் திடீரென்று தோன்றி உதவி செய்த சாதுவைப்பற்றி அறிந்து கொள்ள புவனா ஆவல் மிக்கவளாய் இருந்தாள். ஆகவே சாதுவிடம் அவளே மெதுவாகப் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள்.

"சாதுவுக்கு எந்த ஊரோ... உங்களைப் போன்ற நல்ல மனிதர்களைப் பார்ப்பதே கடினம்!" என்றாள்.

"என் ஊர் மதுராபுரி......" என்று கூறிவிட்டு சாது மௌனமானார்.

"இங்கு யாத்திரை வந்திருக்கிறீர்களோ...?"

"யாத்திரையல்ல அம்மணி... மதுராவின் கோவில் கஜினி முகமதுவால் சூறையாடப்பட்டது......சிலை சிறு கற்களாக நொறுக்கப்பட்டது... இந்துஸ்தானத்தின் கலைச் செல்வங்களைக் கொள்ளையடித்து நாசப்படுத்தவே அந்த இஸ்லாமிய இராட்சதனை ஆண்டவன் படைத்திருக்கிறான் போலும்... சோமநாதரின் திருச் சந்நிதானத்தை அந்த நீசனின் கால்கள் பட்டு, களங்கப்படுத்தக் கூடாது; அது தடுக்கப்பட வேண்டும் என எண்ணியே இங்கு ஓடோடியும் வந்தேன். வந்த இடத்தில், ஆண்டவனின் புனித இல்லமான ஆலயத்தில், அபலைப் பெண்ணொருத்தியின் கற்பை தேவில் புரோகிதனே சூறையாட முயலும் கோரக் காட்சியைக் கண்டேன். கடவுள் வழிபாட்டுக்குரிய இடம் காமுகர்களின் கோட்டமாகி விட்டது; அறம் தழைக்க வேண்டிய இடத்தில் மறச் செயல்கள் மலிந்து விட்டன...கடவுள் தன்மையுடன் இருக்க வேண்டிய சிலை கல்லாகி விட்டதில் வியப்பொன்றுமில்லை என்பதை இப்பொழுதுதான் உணருகிறேன்... அதைக் கஜினி முகம்மது உடைக்க முயல்வதில் தவறில்லை என்றுகூட எண்ணத் தோன்றுகிறது..."—சாது ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

புவனா பதில் ஏதும் சொல்லவில்லை; கணவனைப்பற்றிய கவலையே அவள் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்தது.

"மனிதப் பேய்கள் உலவும் இந்த ஆலயத்திற்கு, ஆண் துணையின்றி தன்னந் தனியாக ஏனம்மா வந்தீர்கள்? உங்கள் கணவரையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே..."—சாது பரிவோடு யோசனை கூறினார். புவனாவின் கடைவிழியிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

"அழாதீர்கள் அம்மணி! நான் ஒன்றும் தவறாகப் பேசிவிடவில்லையே..."

"நீங்கள் பேசியதில் குற்றம் ஏதும் இல்லை...எல்லாம் என் விதி...என் கணவர் நோய்வாய்ப் பட்டிருக்கிறார் ........ அவருக்கு உயிர்ப் பிச்சை கேட்கப்போன இடத்தில்தான் கற்பு பறி போக இருந்தது. நல்ல சமயத்தில் நீங்கள் வந்து காப்பாற்றினீர்கள்!"—விக்கல் விம்மலுடன் தன் நிலைபற்றி அவள் விளக்கம் தந்தாள்.

"உங்களது வீடு நெடுந் தூரமோ?......"

"இல்லை; அதோ அந்தத் தெருக் கோடியில்...இன்று நீங்கள் எங்கள் விருந்தினராக..."

அவள் பேசி முடிக்கவில்லை; இரவின் அமைதியில் சற்று தூரத்தில் குதிரை வீரர்கள் விரைந்து வரும் குளம்போசை தெளிவாகக் கேட்டது.

"இரவில் நகருக்குக் காவல் உண்டா?"—சாது கேட்டார்.

"காவலா? ஏராளமான ராஜபுத்ர வீரர்கள் இந்து தர்மத்தைக் காக்க கோட்டையில் அணி வகுத்து நிற்கிறார்கள்..."

"அப்படியானால் கஜினிக்குத் தோல்வி நிச்சயமென்று சொல்லுங்கள்..."

"அதிலென்ன சந்தேகம்? ஒரு இந்து உயிருடன் இருக்கும் வரையில் கஜினியோ அவன் படை வீரர்களோ இந்த மண்ணில் காலடியும் எடுத்து வைக்க முடியாது!"—அவளுடைய குரலில் நம்பிக்கை தொனித்தது. சற்று நேரத்திற்குமுன் ஏற்பட்ட பயங்கர அனுபவத்திற்குப் பின்னும், மதத்திடமும் நாட்டிடமும் அவள் கொண்டுள்ள பற்றினைக் கண்டு ஆச்சரியப்பட்டார் சாது. அதற்குள் குதிரை வீரர்கள் சமீபத்தில் வந்து விட்டார்கள் என்பதற்கு அறிகுறியாக குளம்போசை பலமாகக் கேட்டது.

"அம்மணி, நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்," என்றார் சாது அவசர அவசரமாக.

"இல்லை......தாங்கள்......"

அவர் நின்று பேசாமல் வந்த வழியே வேகமாகத் திரும்பினார்.

"தாங்கள் பெயரையாவது," —அவள் கேட்டாள்.

"என் பெயர்......என் பெயர் நிர்மலானந்தன்," என்று கூறி விட்டு அவளை அன்பொழுகப் பார்த்தார். அவளும் நன்றியுணர்ச்சியோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள். நான்கு விழிகளும் ஒன்றிக் கலந்தன. அவளுடைய குங்குமம் வியர்வையால் அழிந்து போயிருந்தது.

குதிரை வீரர்கள் தெருக் கோடிக்கு வந்து விட்டார்கள். சாது திருடன்போல் இருளில் சென்று மறைந்தார்.

சாது சென்றவுடன், புவனா வேகமாக வீட்டினுள் நுழைந்தாள். எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து போயிருந்தது. விளக்கையேற்றிக்கொண்டு கணவனின் கட்டிலருகே சென்றாள். கணவனைக் கூப்பிட்டாள். அவன் பதில் பேசவில்லை. தூக்கத்தைக் கலைக்க அவனைப் புரட்டினாள். அவன் உடம்பு 'ஜில்' லென்றிருந்தது. மீண்டும் மீண்டும் புரட்டினாள்! அவன் பேசவில்லை; பிணமாகி விட்டான்!

* * *

புவனாவை வீட்டிற்கனுப்பிய பின் இருளில் சாது தன் வழியைத் தொடர்ந்தார். சோமநாதபுரத்து மண்ணில் நிகழவிருக்கும் பயங்கரமான போரைப் பற்றியே அவருடைய மனம் எண்ணிக் கொண்டிருந்தது. சோமநாதபுரம் ஒரு விசித்திரமான இடம்தான்! பிரம்மாண்டமான ஆலயம்; ஆலயத்திற்கு ஏராளமான சொத்து; ஆலயத்தின் ஒவ்வொரு கல்லும் ஒரு காவியமே பேசுகிறது; கலைஞர்கள் தங்களுடைய முழுத் திறனையும் காட்டி சிலைகளைப் பேச வைத்திருக்கிறார்கள். இல்லாவிட்டால், கல்லாக நிற்கும் சிற்பங்கள் பார்ப்போரிடம் எப்படி இவ்வளவு கதைகள் பேச முடிகிறது. கொள்கை மாறுபாட்டின் காரணமாக இந்தக் கலைக் கருவூலம் அழிந்து போனால்... நிர்மலானந்த சாதுவின் சிந்தனை நீண்டது!

புவனாவின் நீண்ட கரிய படக்கும் விழிகள் துறவுக் கோலம் பூண்டுவிட்ட சாதுவின் நெஞ்சத்தில்கூட சஞ்சலத்தையும் சபலத்தையும் உண்டாக்கியது. 'கணவர் ஏதோ நோய் வாய்ப்பட்டிருப்பதாகச் சொன்னாளே...அவனுடைய கதி என்னாயிற்றோ! அவள் காவலில்லாத கழனியாகி விட்டால், புரோகிதர் போன்ற காட்டெருமைகள் புகுந்து'...உலகத்தின் ஆசாபாசங்களிலிருந்து விடுவித்துக்கொண்டதாகத் தோற்றமளித்த சாதுவின் உள்ளம் சம்பந்தமில்லாத ஒரு பெண்ணின் லௌகிக விஷயங்களில் சென்று சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

இருளிலே நிர்மலானந்தர் நடந்துகொண்டேயிருந்தார். சோமநாதபுரம் புதிர்கள் நிரம்பிய இடமாக அவருக்குத் தோற்றமளித்தது. புனித க்ஷேத்திரமான இந்தப் பூமியில், இருளின் மறைவில், மதப் பற்றை ஆதாரமாகக்கொண்டு என்னென்ன அட்டூழியங்கள் நடைபெறுகின்றனவோ என எண்ணி நிர்மலானந்தர் பெருமூச்சு விட்டுக்கொண்டார். லட்சியமற்று சோமநாதபுரத்தின் தெருக்களிலே அவர் நடந்து கொண்டேயிருந்தார். இரவின் அமைதியில், அவர் அணிந்திருந்த மரப் பாதரட்சைகள் எழுப்பிய ஓசை தூங்கிக்கொண்டிருந்த ஓரிரு நாய்களை எழுப்பி விட்டன. காவல் காத்துக் கண்ணயர்ந்திருந்த அந்த பைரவர்கள் அகாலத்தில் நடமாடும் இந்த அதிசய மனிதரைப் பார்த்து உச்ச ஸ்தாயியில் குரைத்தன. சாதுவோ எதையுமே பொருட்படுத்தாமல் சிந்தனையையே துணையாகக் கொண்டு நடந்துகொண்டேயிருந்தார்.

கால்கள் களைத்துப் போய்க் கண்ணயர வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. காலமோ போர்க் காலம். நகரெங்கும் போர் வீரர்களின் நடமாட்டம் மிகுந்து காணப்படுகிறது. எங்கேயாவது வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கினால் போர் வீரர்கள் வந்து எழுப்பி அர்த்தமில்லாத கேள்விகளை யெல்லாம் கேட்பார்கள். இவைகளை யெல்லாம் தவிர்த்து நிம்மதியாகக் கண்ணயர சாது நகரத்தின் எல்லையிலே உள்ள மண்டபத்தை வந்தடைந்தார். அது ஒரு ஏகாந்தமான மண்டபம். சுற்றுப்புறத்தில் ஜன சந்தடியே இல்லாத இடம். நாழிகை அதிகமாகிவிட்டது. பின்னிலவுக் காலம். ஒளியான சந்திரன் தயக்கத்தோடு தன் அங்கஹீனத்தை வெளிகாட்ட மனமில்லாதவன்போல் மெதுவாகக் கிளம்பிக் கொண்டிருந்தான். மேலங்கியை உதறிப் போட்டு நிர்மலானந்தர் படுத்திருந்தார். கடலை நோக்கிக் காற்று மெதுவாக வீச ஆரம்பித்தது. களைப்பின் மிகுதியால் இமைகள் தாமாகவே மூடிக் கொண்டன. தூரத்தில் அலையோசை தாலாட்டுப் பாட, மென்காற்று மேனி வருட, நிலவு போதையூட்ட நிர்மலானந்தர் நிம்மதியாகக் கண்ணயர்ந்தார்.

எவ்வளவு நேரம் தூங்கினாரோ அவருக்கே தெரியாது. திடீரென்று எங்கிருந்தோ பல்லக்குத் தூக்குபவர்களின் 'ஏலேலோ' சப்தம் கேட்டது. மெதுவாகக் கண் விழித்தார். நிலவு மறையவில்லை. பொழுது விடிவதற்கு இன்னும் மூன்று

[தொடர்ச்சி பக்கம்—8]

## நல்லதோர் வைரம்!

"நபிகள் போதித்த இஸ்லாம் மார்க்கம் வைரம்போன்றது; நல்ல வைரத்தைப் பட்டை தீட்டி, அதைக் கையிலே மோதிரமாகவும் செய்து போட்டுக் கொள்ளலாம்; காதில் கடுக்கனாகவும் அணிந்து கொள்ளலாம்; அதே வைரத்தை விற்று, கிண்டி குதிரைப் பந்தயத்தில் வைத்தும் ஆடலாம். ஆனால் வைரத்தைப் பயன்படுத்துவதிலிருந்துதான், அந்தப் பயனின் தரத்தை அறிந்து கொள்ள முடியும். அதைப்போல, இஸ்லாம் மார்க்கம் என்ற வைரம் யாருக்கு—எந்த இடத்திலே—எப்படிப் பயன்படுகிறது என்பதிலேதான் அதன் மாண்பு உணரப்படும். இதை எண்ணும்போது நல்லவர்கள் கிடைப்பது என்பதுகூட எளிதாகிவிடும். ஆனால் அவர்கள் சொல்லிச் சென்ற கருத்துக்களை பயன்படுத்துவதிலேதான் அதன் உயர்ந்த மார்க்கம் இருக்கிறது. இன்று அது யாருக்குப் பயன்படுகிறது? ஆதிக்கக்காரர்களுக்குப் பயன்படுமானால், ஏழையை 'ஐயோ!' என்று கதற வைப்பவர்களுக்குப் பயன்படுமானால் அதில்—இந்த உயரிய மார்க்கத்தின் பலன் இல்லை. இவ்வுயரிய மார்க்கம் அக்கிரமத்தை அழிக்கப் பயன்பட வேண்டும்; உலகத்தில் நல்ல தோழமையை உண்டாக்குவதற்குப் பயன்பட வேண்டும்."

—அறிஞர் அண்ணா

## அன்புள்ள பொன்முடி!

''விஞ்ஞானத்தின் வளர்ச்சி! அறிவின் உச்சகட்டம்! உழைப்பின் வெற்றி! வியர்வையின் விளைவு! ஆராய்ச்சியின் முடிவு! அதோ... அதோ......வானத்தில் சுற்றிச் சுழலும் செயற்கைச் சந்திரன்!'' என்று அகிலத்தின் மூலை முடுக்குகளில் இருப்பவர்கள் எல்லாம் மூக்கின்மீது விரல் வைத்து வியப்பைக் கொட்டுகிறார்கள். பிற மண்டிலங்களுக்குப் பயணம் நடத்தவும்—ஆங்கு குடியேறவும் குடியேறிய இடங்களில் வாழ்வுக்குத் தேவையான சொத்து சேர்க்கவும் மனிதர்கள் திட்டமிடத் தொடங்கி விட்டார்கள்.

சந்திர மண்டிலம்—செவ்வாய் மண்டிலப் பயணங்களை விரைவில் நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை ஒளியை புதிய சந்திரன் வழங்கியிருக்கிறது. நமது தலைமுறையிலேயே சந்திர, செவ்வாய் மண்டிலங்களில் தொடர்பு கொள்ளலாம் என்ற வெற்றிப் புன்னகையோடு விஞ்ஞானிகள் அறிக்கைகள் குவிக்கின்றனர். உலகெங்கும் உற்சாகம்! அளப்பரிய ஆனந்தம்!

''இதிலென்னப்பா அதிசயமிருக்கிறது—ஆச்சரியத்தால் குதிக்கிறேளே; சந்திரனிலும் செவ்வாய்க் கிரகத்திலும் குடியேறுவதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்களாமே; ஏற்பாடு! இவாள் எல்லாம் ஒரு காலத்தில் நம்மைப் பழித்தவாள். மேலே மோட்ச மிருக்கிறது; அங்கே போய்க் குடியேறிச் சுகமாயிருக்க இங்கேயே முன்கூட்டி ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்—என்று நம்மவா சொன்னபோது மோட்ச லோகமாவது; அங்கே போகவாவது என்று கேலி பேசினாள். இப்போ அவாளே ஒத்துண்டாள்; சந்திர கிரகம், செவ்வாய் கிரகம்—அங்கே பிரயாணம் என்றெல்லாம் வாய் கிழியப் பேசுறாள். திலோத்தமா, ரம்பா, ஊர்வசி, மேனகா எல்லாம் மேலேயிருந்து நூலேணி வழியா இறங்கினா—இறங்கினவா கீழேயுள்ள ரிஷிகளுடன் ஆனந்தமாக் கூடினா—குலவினா—குழந்தைகளைப் பெத்தா — அப்படின்னு புராணத்திலே படிச்சுட்டு நூலேணியாவது கிலேணியாவதுன்னு கிண்டல் பேசினா; இப்போ ''ராக்கெட்'' சுத்துதாம், ''ராக்கெட்''! எங்க மேனகாவோட ''ஜாக்கெட்'' இதைவிட வேகமா சுத்தும்; தெரியுமோ!...''

# தங்கத் தகடு

இப்படிப் பேசுகின்ற மனிதர்களையும் நானும் நீயும் சந்திக்காமலில்லை; பொன்முடி! இலங்கைக்கோ, இலண்டனுக்கோ, மாஸ்கோவுக்கோ, பாரிசுக்கோ போவதுபோல சந்திரனுக்கும் செவ்வாய் மண்டிலத்துக்கும் போய் விட்டுத் திரும்புகிற பிரயாணத்தைப்பற்றி விஞ்ஞானிகள் மண்டையை உடைத்துக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். ''செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் என எண்ணியிருக்கும் பித்த மனிதர்''களோ விஞ்ஞானிகளின் அறிவைக் கேலி செய்யும் நடவடிக்கைகளில் முன்னேறுகின்றனர். செயற்கைச் சந்திரன் ''பிப் பிப்'' என்ற ஒலி அலைகளின் வாயிலாக வெளியிடும் தகவலை விஞ்ஞானிகள் பதிவு செய்து வான மண்டிலத்தின் நிலையை உணருகிறார்கள் என்று

# நீட்டோலை

செய்தி கிடைக்கிறதல்லவா; அந்த ஒலி அலைப் பதிவுக்கு விஞ்ஞானமும் தேவையில்லை; வியர்வை கொட்டும் உழைப்பும் தேவையில்லை; இதோ, அதைத் தவத்தின் மூலமே சாத்தியமாக்கலாம் என்று கூறுகிறார்—சாதாரணமானவரல்ல; சங்கராச்சாரியாரே அப்படிக் கூறுகிறார்.

''சப்தம் அனாதியானது. அலைகளில் உள்ள வேத சப்தங்களை ரிஷிகள் தங்கள் ஞான திருஷ்டியால் அறிந்து வாய் மூலம் உபதேசம் செய்து வந்தனர். ரேடியோவில் சில அலைகளை ரிஸீவர் மூலம் பதிவு செய்வதுபோல ரிஷிகள் தங்கள் யோகத்தினால் கிடைத்த உள் சக்தியைக் கொண்டு இந்த சப்தங்களைக் கிரகித்தனர்!''

—சென்னை மயிலாப்பூர் சமஸ்கிருத கலாசாலையில் காமகோடி பீடாதிபதி வகுத்த வாசகங்களே மேலே யிருப்பவை.

''தேவர்களுக்குப் பிரீதியான யக்ஞம் முதலியவைகளைச் செய்வதனால் அவர்கள் திருப்தி அடைந்து மழை முதலிய இயற்கை சவுகரியங்களை மனிதர்களுக்காகச் செய்கிறார்கள். யக்ஞத்தில் அளிக்கும் ஹவிஸ் தேவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று சந்தேகம் வேண்டாம். பகவான், தேவர்களுக்கு அந்தர்யாமியாக இருந்து திருப்திப்படுகிறார். எந்த 'டிரஷரி'யில் பணம் கட்டினாலும் சர்க்காருக்குச் சேருவதுபோல தேவர்களுக்கு அர்ப்பணம் செய்வதும் ஈசுவரனைச் சேருகிறது!''

—இதுவும் இம்மாதம் 15-ம் நாள், சென்னை மயிலாப்பூரில் சங்கராச்சாரியார் நிகழ்த்திய ''அறிவுரை''தான்! என்ன சொல்கிறாய் பொன்முடி; எங்கேயோ செயற்கைச் சந்திரன் படைக்கப்படுகிறான் என்று அறிவுலகம் ஆரவாரத்தில் மூழ்கியிருக்கிறதே; அந்த சந்திரன்கள் சுற்றிவரும் உலகத்தில் தான் சங்கரர்களும் இருக்கிறார்கள்.

ரிஷிகள் வானொலியின் பதிவு யந்திரங்களாம்! தேவர்கள் சர்க்காரின் டிரஷரிகளாம்! எந்தத் தேவர்கள்? பூதேவர்களோ—மேல் தேவர்களோ—இப்போதைக்கு நாம் இராமநாதபுரம் தேவர்களைத்தான் அறிவோம்!

இனிமேல், சங்கராச்சாரியாரின் உபதேசத்திற்குப் பிறகு, ஒவ்வொரு வானொலி நிலையத்திற்கும் பெயர்கள்கூட மாற்றப்படலாம்.

திருச்சி நிலையம், வேதவியாசர் நிலையம் எனவும்; சென்னை நிலையம், துர்வாச முனிவர் நிலையம் எனவும்; டில்லி நிலையம், மாண்டவ்யர் நிலையம் எனவும்; இலங்கை நிலையம், அகத்திய முனி நிலையம் எனவும் பெயர் கொள்ளலாம். ஏனெனில் அலைகளைப் பதிவு செய்து வெளியிடுவதில் ரிஷிகள்—வானொலிக்கு முந்தியவர்கள் என்றல்லவா சங்கரர் திருவாய் மலர்ந்திருக்கிறார்!

டிரஷரியில் பணம் கட்டினால் பணம் கட்டியதற்கு ரசீது கொடுக்கிறார்கள். சந்தேகமிருந்தால் சர்க்கார் அலுவலகத்திலும் பணம் வந்து சேர்ந்த விபரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் ஆனால் தேவர்களிடம் தரும் ஹவிஸ்ஸுக்கு ரசீது கிடைப்பதில்லையே என்று கேட்பாய்—எனக்குத் தெரியும்! அப்படியெல்லாம் கேட்பது நாத்திகம்—அந்த நாத்திகர்கள்தான் தமிழை அழிக்கிறார்கள் என்று நமது நிதி மந்திரி சுப்பிரமணியம் 'கல்லாடம்' விழாவின்போது கர்ச்சித்ததை மறந்து விடாதே!

அறிவின்பாற்பட்ட விளக்கனை யெழுப்புகிறவன் நாத்திகன் என்பது நிதி மந்திரியின் வாதம்! சங்கரர் போன்ற ஆத்திகப் பெரியவர்களின் அடிவருடுவதிலே காணுகின்ற ஆனந்தம் எங்கும் கண்டோமில்லை யென்று ஆடிப் பாடும் சுப்பிரமணியக் கூட்டத்தார் சுற்றி வரும் செயற்கைச் சந்திரனுக்கிடையே இருக்கத் தான் செய்கிறார்கள்.

ரஷ்யச் சந்திரன் பூமியைச் சுற்றுகிறான்.

காமகோடி, உபதேசிக்கிறார்.

இதுமட்டுமல்ல; இந்த நாட்டு நிலைமை பொன்முடி; இதைப் போன்ற பரிதாபகரமான செய்திகளை நாள்தோறும் காணுகிறோம். இதோ, ஒன்றிரண்டு செய்திகள்; ஏடுகளில் வந்தவை—இணைத்துப் பார்! அதோடு நினைத்துப் பார், நாம் எவ்வளவு பின்தங்கி யிருக்கிறோம் என்பதை!

''செயற்கைச் சந்திரன் 180 தடவை பூமியைச் சுற்றியிருக்கிறது!''

''பிரபல சினிமா நடிகை திருப்பதி கோயில் பிரகாரத்தில் படுத்துப் புரண்டு பல தடவை சுற்றி வந்தாள்; கோவிந்தா—கோவிந்தா என்று கூவியபடி!''

''வேலை கிடைக்காமல், வறுமை தாங்காமல், பெற்ற குழந்தையை வெட்டி யெறிந்தான் காஞ்சீபுரத்தில் ஒரு தந்தை!''

''நிதி மந்திரி டி. டி. கே. கடன் வாங்குவதற்காக வெளி தேசங்களைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்!''

திருச்சியில், 13—10—57 அன்று, எம். கே. எம். அப்துல் சலாம் எம். பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற பீடி, சுருட்டுத் தொழிலாளர் மாநாட்டில், தோழர் எம். எஸ். மணி, தோழியர் தேசியமணி, தோழர் ஐ. எம். ஷரீப் ஆகியோர் பேசுகிறார்கள்.

"திருப்பதி கோவில் கோபுரத்துக்கு இருபது லட்ச ரூபாய் செலவில் தங்கத் தகடு போடப்படும்!"

"ஐந்தாண்டுத் திட்டத்தில் சிலவற்றைப் பணமில்லாததால் கைவிட நேரும் என்று டி. டி. கே. லண்டனில் பேசியுள்ளார்!"

"திருப்பதி கோயிலுக்குத் தங்கத் தகடு போடுவதையொட்டி நடைபெறும் விசேஷ யாகத்திற்கு இந்தியா முழுவதிலும் இருந்தும் வேத பிராமணர்கள் வந்திருக்கிறார்கள்!"

"திருப்பதி ஏழுமலையானுக்கு முடி காணிக்கை கொடுக்கவரும் பக்தர்களுக்கு மொட்டையடிக்கும் சவரத் தொழிலாளர்களிடையே கைகலப்பு! ஏழு பேர் காயம்! எட்டு பேர் கைது!"

விஞ்ஞான வளர்ச்சி; செயற்கைச் சந்திரன் சுற்றி வருவது!

பண வரட்சி; டி. டி. கே. சுற்றி வருவது!

அறிவு வரட்சி; ஆலயத்தைச் சுற்றுவது!

இவைகளை மட்டுமல்ல— இன்னும் பல உண்மைகளை மேலே தொகுத்துள்ள செய்திகள் உனக்கு விளக்கிக் காட்டும். மழையால் நனைந்து, வெயிலால் கருகிச் சருகாகும் மனிதர்களை ஓட்டைக் குடிசைகளில், ஒதுக்குப் புறங்களில், சென்னையின் அழகான வீதி யோரங்களில் நாள்தோறும் காணுகிறோம். ஏழுமலையானுக்கு இருக்கிற கோபுரம் போதாதென்று தங்கத் தகடு வேய்கிறார்களாம், தங்கத் தகடு! அதற்கு இந்தியா முழுவதிலுமுள்ள வேதப் பிராமணர்கள் காக்கைகள் போல ஒற்றுமையாகப் பறந்து வருகிறார்களாம். ஆனால் அங்கேயுள்ள சவரத் தொழிலாளிகளோ ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டு சிறைக் கோட்டம் செல்லுகிறார்களாம்!

காஞ்சியிலே ஒரு குடும்பம் பாழாகிறது, பட்டினியால்! காஞ்சியில் மட்டுமா? பல்வேறு இடங்களில் பட்டினியால் தற்கொலை! கடன் கேட்க டி. டி. கே. அமெரிக்காவிடம் ஓடுகிறார். காட்டாதவர்களிடமெல்லாம் பல்லைக் காட்டுகிறார்.

இங்கே இருபது லட்சத்தில் தங்கத் தகடு! இது தகுமா என்றால் உள்ளூர் நிதி மந்திரி 'நாத்தீகப் பேச்சு' என உறுமுகின்றார்.

இருபது லட்சம் மிச்சமாகிவிட்டால் இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிவிடுமா என்று கேட்பர். அறிவோம் அதனை! ஆகாதுதான் இருபது லட்சத்தால்! ஆனால் இதுபோல் எத்தனை இருபது லட்சங்கள் தங்கத் தகடுகளாய், வெள்ளி வாகனங்களாய், கோயில்களில் மேடிட்டுக் கிடக்கின்றன என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்த்து, அத்தனையும் சேர்த்தால் ஒரு பெருந் திட்டத்திற்கு ஆகுமா ஆகாதா என்பதையாவது முடிவுசெய்ய நெஞ்சுரம்–தெளிவு–கூர்த்தமதி அவர்களுக்கு இருக்கிறதா என்பதுதான் நமக்குள்ள ஐயப்பாடு!

சங்கரர் கூறுகிறார்; பகவானே ஒரு சர்க்கார்; தேவர்கள் டிரஷரிகள் என்று!

அமெரிக்க சர்க்காரிடமும், பிரிட்டிஷ் சர்க்காரிடமும் பிச்சையெடுக்கப்போகும் டி. டி. கே., சங்கரர் ஆசிபெற்றவர். அருகருகே இருப்பவர்கள். இருவருமே மயிலாப்பூர் பாலத்தால் இணைபவர்கள். மாம்பலம் மாளிகையில் சந்திப்பவர்கள். அந்தப் பகவத் சர்க்காரிடம் பணம் கேட்டால் திருப்பதி, ஸ்ரீரங்கம், தில்லை, மதுரை, காசி, ராமேஸ்வரம், பூரி, ஜெகன்னாத், பண்டரிபுரம் — என்றெல்லாமுள்ள பல டிரஷரிகளிடமிருந்து பணம் பெறலாமே!

அமெரிக்கரிடம் சென்று ரஷ்யரைத் திட்டி, ரஷ்யாவிடம் சென்று அமெரிக்காவைத் திட்டி பச்சோந்திப் பண்பை— பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையின் பவிஷைப் பாரறியப் பறையடித்து மானத்தைப் போக்கிக் கொண்டிருக்க வேண்டாமே!

இதையெல்லாம் நீயும் நானும் சொன்னால் பொல்லாதவர்கள்— போக்கற்றவர்கள் — நாத்திகர்கள் என்று கூறிவிடுகிறார்கள்! என்ன செய்வது; சந்திர மண்டலத்திற்குப் பயணம் ஆரம்பமான பிறகுகூட— அங்கே மனிதன் நிலையாகக் குடியேறிய பிறகுகூட— திருப்பதி மலையின் படிக்கட்டுகளுக்கும் தங்கத் தகடு போட வேண்டும் என்று சொல்லக்கூடிய மேதைகள்தான் இங்கே திரிந்துகொண்டிருக்கிறார்கள்! இவர்களைத் திருத்தும் விஷயத்தில் செயற்கைச் சந்திரனும் தோல்வியே அடைந்தான்!

அன்புள்ள,

**நண்பன்**

OOOOOOOOOOOOOOOOOOOOOOOOO

## "ஹோம்லண்ட்"

★

ஹோம்லண்ட் — சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடாகி விட்டது; அதற்கான அனுமதி கிடைத்துவிட்டது; துவக்க வேலைகள் முடிந்து கொண்டு வருகின்றன.

ஹோம்லண்ட்—'நம் நாடு' அலுவலகத்திலிருந்து இனி வெளி வரும்.

ஹோம்லண்ட் இதழ் சம்பந்தப்பட்ட கடிதங்கள், மணியார்டர்கள், இன்ஷூயூர்கள், செக்குகள் முதலியன இனி,

சி. என். அண்ணதுரை,<br>ஹோம்லண்ட் அலுவலகம்<br>'அறிவகம்'—இராயபுரம்<br>சென்னை—**13**

என்ற முகவரிக்கு அனுப்பக் கோருகிறேன்.

'திராவிட நாடு' சம்பந்தமானவைகளை, வழக்கம்போல் காஞ்சீபுரம் முகவரிக்கு அனுப்பவும்.

ஹோம்லண்ட் — சென்னையிலிருந்து அக்டோபர் **27**-ல் வெளிவரும்.

வாசகர்களும், ஏஜண்டுகளும், இந்தத் தாமதம் பொறுத்திட வேண்டுகிறேன்.

அன்பன்,

அண்ணதுரை

# நம் வளர்ச்சி!

"தி. மு. கழகத்தின் இன்றைய வளர்ச்சி, நம்முடைய நண்பர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிறது; நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்—எனக்கு இந்த வளர்ச்சி பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்காமல் இல்லை; ஆனால் அதே நேரத்தில் பயத்தையும் கவலையையும் கூடவே அளித்துக் கொண்டுதான் இருக்கின்றது. இவ்வளவு வளர்ந்திருக்கின்றோம் நாம்; இவ்வளவு பெரிய கழகத்தைக் கட்டிக் காப்பாற்றுவதற்கு நாமெல்லாம் ஆற்றல் உள்ளவர்களா என்ற எண்ணம் என்னுடைய உள்ளத்திலே அவ்வப்போது உறுத்திக் கொண்டிருக்கின்றது.

"உங்களிடத்திலே வெளிப்படையாகச் சொல்லிக் கொள்வதிலே நான் வெட்கமடையவில்லை; சட்ட மன்றத்திலே திறமை பெறமுடியுமா முடியாதா என்பதைப்பற்றி எங்களுடைய உள்ளத்திலே என்றைய தினமும் ஐயப்பாடு ஏற்பட்டதில்லை; அதிலே, 'நல்லவர்கள் அல்ல' என்ற பெயர் எடுத்தாலும் கவலையில்லை; ஆனால், இவ்வளவு இலட்சக் கணக்கான மக்கள்-சிற்றூர்களிலேயுள்ள மக்கள் —பேரூரிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள்—மதிப்புக்குரிய தாய்மார்கள்—பொறுப்புள்ள பெரியவர்கள்—ஆர்வங்கொண்ட இளைஞர்கள்—படித்த வாலிபர்கள்—நல்ல அலுவல்களிலே உள்ளவர்கள்—இவர்களெல்லாம் ஆதரவு தருகிற அளவுக்கு இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றி, முழுப் பலனை நாடு அடையத்தக்க வகையிலே நடத்திச் செல்லுவதற்கேற்ற ஆற்றல் எனக்கு உண்டா என்பதில்தான் எனக்கு ஐயப்பாடு!

"ஏழையினுடைய வீட்டில் அழகான பெண் பிறந்து, அவள் 16-வயதாகி, திருமணம் ஆகாவிட்டால், அந்த ஏழையினுடைய உள்ளத்தில் எப்படிக் கவலை தோன்றுமோ, அதைப் போல வளர்ச்சியடைந்த இயக்கத்தைப் பார்க்கின்ற நேரத்திலெல்லாம் நான் கவலையடைகின்றேன். ஏழையினுடைய வீட்டில் பெண் பிறந்தால் ஆபத்து; அந்தப் பெண் அழகாகவும் இருந்தால் அதிகமான ஆபத்து!

"நாம் மிகச் சமான்யமானவர்கள்; நம்மிடத்திலே கிடைத்திருக்கின்ற இந்த இயக்கம் நம்முடைய கட்டுக்கும் அடங்காத அளவுக்கு இன்றைய தினம் வளர்ந்திருக்கின்றது. வளர்ச்சிக்கேற்ற அளவுக்கு நம்முடைய இயக்கத்திலே பலனை பெற வேண்டுமென்றால்—நான் சாதாரணக் கணக்கைச் சொல்லுகின்றேன்—திங்கள் ஒன்றுக்கு தலைமைக் கழகத்தில் 5,000 ரூபாயாவது செலவிட்டால் தான் முடியும். அந்த அளவுக்குப் புதிய பொறுப்புகள் —அந்த அளவுக்குப் புதிய நிலைமைகள்–அந்த அளவுக்குப் புதிய வேலைகள் நம்முடைய கழகத்துக்கு ஏற்பட்டு விட்டன. அன்றாடம் வருகின்ற கார்டு, கவர்களுக்கு மட்டும் நம்முடைய கழகத் தோழர்கள் பதில் எழுதுவதென்றால் ரூ. 10-க்கு தபால் கார்டு வாங்கினால்தான் முடியும்.

"இன்றைய தினம் இந்த ஊரிலிருந்து புறப்படுகின்ற நானோ, மற்ற எந்தத் தோழரோ, நாளைக்கு ஒரு ஊர்— மறுநாள் ஒரு ஊர் என்று தமிழ்நாடு பூராவும் சுற்றி விட்டு, மறுபடியும் இந்த ஊருக்கு வர வேண்டுமென்றால்—நீங்கள் நான் சொல்வதிலே ஆணவம் இருப்பதாகக் கருதாதீர்கள்; உண்மையிருக்கிறதென்பதை ஆராய்ந்து பார்த்தால் உணர்ந்து கொள்வீர்கள்— 5 வருடத்திற்குப் பிறகுதான் வர முடியும். அத்தனை இடங்களில் வேலை இருக்கிறது.

"உங்களுக்கு நான் சொல்லுவேன்—நான் சொன்ன அந்த ஏழை, தன்னுடைய வயிற்றிலேயே பிறந்த நல்ல அழகான பெண் பருவமடைந்து விட்டாள் என்று தெரிவதற்கு முன்னாலேயே, அவள் பருவமடைவாள்—திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் பிறக்கின்ற பொழுதே, அவன் தான் கஷ்டப்பட்டு சேர்க்கின்ற சொத்தில் கொஞ்சம் கொஞ்சம் மிச்சப்படுத்தி, 'அடுத்த தைக்குக் கல்யாணம்—அடுத்தத் தைக்குக் கல்யாணம்' என்று சேர்த்து வைப்பதைப்போல், இங்கே கூடியிருக்கின்ற நீங்களும், இங்கே வர முடியாமலிருக்கின்ற மற்றவர்களும் சீமான்களல்ல என்பது எனக்குத் தெரியும்; நீங்களெல்லாம் கஷ்ட குடும்பத்திலே உள்ளவர்கள்—நான் உணர்ந்திருக்கின்றேன்; நாமெல்லாம் நடுத்தரக் குடும்பத்தார்கள்— இதிலே ஒருவர்க்கொருவர் பெருமை பேசிக் கொள்ளத் தேவையில்லை; கஷ்ட ஜீவனத்தில் இருப்பவர்கள்— ஆனாலும், ஏழை எப்படி தன்னுடைய மகளுடைய திருமணத்திற்காகக் கொஞ்சம் கொஞ்சம் பணத்தை அவ்வப்போது சேர்த்துக் கொண்டு வருவானோ அதைப்போல், தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தி. மு. கழக ஆதரவாளர்கள் தொழிலிலே கிடைக்கின்ற வருமானத்திலே ஒரு சிறு பகுதியையாவது தி. மு. கழக வளர்ச்சிக்கென்று— தி. மு. கழகப் பொறுப்புக்கென்று ஒதுக்கி வைத்துக் கொண்டே வந்தாக வேண்டும்.

"நீங்கள் அப்படிப்பட்ட விதத்திலே எங்களுக்குக் கை கொடுத்தால்தான் பெரிய வளர்ச்சியடைந்துவிட்ட பிறகு- வளர்ச்சி பெற்றுவிட்ட இந்த இயக்கம், அதன் வளர்ச்சியைக் காப்பாற்றிக் கொள்ளவும், இலட்சியத்தை அடைவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவும் பயமின்றி ஈடுபட முடியும்!

—அறிஞர் அண்ணா




## எது இன்பம்?

ஆசிரியர்: பரமதாசன்

நான்கு ஆடவர்கள், ஒருவர் பின் ஒருவராக ஒரு பெண்ணைக் காதலிக்கிறார்கள். அவளும் வரிசையாக யார் யாரை எந்தெந்த சமயம் காதலிக்கிறாளோ அப்போதெல்லாம் அவரவரையும் முழு மனதோடு காதலிக்கிறாள்; தன்னையே அர்ப்பணிக்கிறாள்.

கடைசிக் கட்டத்தில் கர்ப்பமுற்று, அப்போதுதான் தன் தவறுகளை உணர்ந்து தற்கொலை செய்துகொள்ளப் போகுமுன், முதலாவது—மூன்றாவது காதலர்கள் கை கொடுத்து கடைசிக் காதலனோடு சேர்த்து விடுகிறார்கள். கதை முடிகிறது. நடை சாதாரணம். கருத்தோ—ஆசிரியருக்குப் பெண்ணினத்தின்மீது மட்டும் உள்ள வெறுப்பை விளக்குகிறது. பிழைகள் செறிந்து கிடக்கின்றன.

வெளியிட்டோர்:

**நித்தில நிலையம், யாழ்ப்பாணம்.**

## நரியம்மா விடுதி நங்கை

எழுதியது: "மேதாவி"

துறைமுகத்தில் விடுதி யொன்றை நடத்தி வருகிறாள் நரியம்மா என்ற பட்டப் பெயர் பெற்ற அம்புஜம். அவள் கணவனை ரத்னவேல் ஒரு அப்பாவிபோல் காணப்படுகிறான். அங்கே வேலைக்காரி நிலையிலுள்ள விஜயா என்ற பெண், அளவற்ற சொத்துக்கு வாரிசு என்பது அவளுக்குத் தெரியாவிடினும், அந்த உண்மையைத் தெரிந்த மூவர் அவளையடைய ரகசியமாகப் போட்டியிடுகின்றனர். அந்த உண்மையே தெரியாமல் அவளைத் துப்பறியும் போலீஸ் அதிகாரி சேகர், தம் ஏராளமான ஆராய்ச்சிக்கிடையிலும் காதலிக்கிறார். நகரில் பிரம்மாண்டமான கொள்ளைகளை மிகத் துணிகரமாக நடத்தி வருகிறார்கள் ஒரு முகமூடி கோஷ்டியினர். அவர்களுக்குக் கப்பல், படகு வசதிகளும் நிறைய ஆட்களும் இருக்கின்றனர். தம் அபாரமான திறமையாலும், சாதுர்யமான பேச்சாலும், ஆபத்துகளிலிருந்து தப்பி, குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் சேகர், விஜயாவையும் கைப்பிடிக்கிறார் இறுதியில். படிப்பதற்கு ஆவலைத் தூண்டும் வகையில் சுவையுடன் கூடியிருக்கிறது கதைப் போக்கு.

விலை ரூ. 1—50

வெளியிடு:

**பிரேமா பிரசுரம், சென்னை-24.**

## இன்ப வாழ்வு

எழுதியது: ஏ. கலைக்குகன்

புணாக்கார பாலுப்பிள்ளை மகன் கோபு, தாசி விஜயாவின் மகள் மாலாவைக் காதலிக்கிறான். பெற்றோரின் எதிர்ப்பினால் இருவரும் வீட்டிலிருந்து வெளியேறி விடுகின்றனர்—இது போன்ற சாதாரண கதையமைப்பைக் கொண்டது, கதை! ஆனால் காட்சிகளும், வசனமும் பழைய நாடகங்களையும் படங்களையும் நினைவுபடுத்துவதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை.

விலை மலிவுதான்; 75 புதுக் காசு.

வெளியிடு:

**குகன் பதிப்பகம், தளவாய்புரம்.**

## பார்த்திபன் கனவு (மலிவுப் பதிப்பு)

எழுதியது: கல்கி

சுருக்கியது: மீ. ப. சோமசுந்தரம்

பெருங்கதைச் சுருக்கத்தின் இன்றியமையாத இலட்சணம் தடைபடாக் கதைபோட்டமும்; மூல ஆசிரியர் கைக் கொண்ட நடையிலே சிதைவு ஏற்படாதிருத்தலும்தான். அந்த முறையிலே திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் குறுக்கியிருக்கும் இந்தப் பெருங் கதையைப் படிக்குங்கால் மறைந்த 'கல்கி' அவர்கள் தனது சரித்திரக் கற்பனையை இந்த அளவில் எழுதாமல்; ஏன் அவசியமின்றி பெருக்கி எழுதினார் என்கிற சந்தேகம்தான் எழுகிறது. அவ்வளவு நன்றாக; தொடர்ச்சி கெடாமல் சுருக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியரின் வாக்கியங்களைக் கொண்டே நாவலைச் சுருக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

புத்தகத்தைப் பற்றி சில வார்த்தைகள்: அழகான முகப் பேரடும், வழவழப்பான காகிதத்தோடும் இதை வெளியிட்டு; 'மலிவுப் பதிப்பு' என்று போட்டிருக்கிறார்கள். உண்மையில் நூலின் அழகை நோக்கும்போது இது மலிவுப் பதிப்பாகத் தோன்றவில்லை; 'படாடோபப் பதிப்பாகத்'தான் காட்சியளிக்கிறது.. விலையில் மட்டும்தான் மலிவு!

விலை ரூ. 1—30

கிடைக்குமிடம்:

**மங்கள நூலகம், சென்னை-6.**

## சோமநாதபுரத்துச் சிலை . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அல்லது நான்கு நாழிகைப் பொழுது கட்டாயம் இருக்கும். பல்லக்கு மண்டபத்தை நோக்கித்தான் வருகிறது என்பதைக் கணப் பொழுதில் அறிந்து கொண்டார். இந்தப் பல்லக்கும் அதில் வரும் மனிதரும் சோமநாதபுரத்தைப் பற்றி என்னென்ன புது உண்மைகளுக்கு ஆதாரமாக இருக்கப் போகிறாரோ என்று சாது மனதிற்குள் எண்ணிக் கொண்டார். புதிர்கள் நிரம்பிய இந்த நகரத்தின் ரகசியங்களைக் கண்டறிய வேண்டுமென்ற பேராவல் நிர்மலானந்தரின் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தது. ஆகவே, பல்லக்கு அருகில் நெருங்கி வருவதற்கு முன்பாகவே எழுந்து, மண்டபத்தின் உட்புறமாகச் சென்று மறைவான இடமொன்றில் பதுங்கிக் கொண்டு நடக்கின்ற காரியங்களை மெதுவாகக் கவனிக்கலானார்.

பல்லக்குத் தூக்குபவர்கள் நேராகப் பல்லக்கை மண்டபத்தில் கொண்டுவந்து இறக்கினார்கள். பல்லக்கின் இருபுறங்களிலும் திரைகள் கட்டப்பட்டிருந்தன. பல்லக்கு இறக்கப்பட்டவுடனேயே அதிலிருந்து யார் இறங்குகிறார்கள்; எங்கே போகிறார்கள் என்பதைக் கவனிக்க நிர்மலானந்தர் கண்களை விழிப்பாக்கிக் கொண்டார். அவர் நெஞ்சம் படபட வென்று வேகமாக அடித்துக் கொண்டது. திரை விலக்கப்படவுமில்லை; பல்லக்கிலிருந்து எவரும் இறங்கவுமில்லை! சாதுவின் ஆச்சரியம் அதிகரித்தது. பல்லக்கு சுமப்போரும் பல்லக்கை அப்படியே வைத்துவிட்டுக் காலாற நடந்து சென்றனர்.

சிறிது நேரம் பொறுத்திருந்த பின், சாது மெதுவாகப் பூனை போல் அடிமேல் அடி வைத்துப் பல்லக்கின் அருகில் வந்தார். ஓசைப்படாமல் திரையை விலக்கினார். உள்ளே ஒருவருமில்லை. பல்லக்கு காலியாகவே இருந்தது. நிர்மலானந்தரின் ஆவல் அதிகரித்தது. பல்லக்குக்காரர்கள் சிறிது தூரத்தில் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய பார்வையில் படாமல் சாது பழையபடியே ஒளிந்து கொண்டார். கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு சுற்றுப் புறத்தைக் கவனமாகக் கண்காணித்தார்.

சில விநாடிகள் தாம்; யாரோ கைத் தட்டும் ஓசை கேட்டது! ஓசை வந்த திசையை நிர்மலானந்தர் கூர்ந்து கவனித்தார். மங்கிய நிலவொளியில் அழகான பெண்ணுருவம் ஒன்று நின்று கொண்டிருந்தது. யார் அந்தப் பெண்? எங்கிருந்து வந்தாள் அவள்? அவர் எவ்வளவோ கவனமாக இருந்தும் அவள் எப்படி அங்கு வந்தாள் என்பதைக் கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டதே! அந்தப் பெண் மீண்டும் கைத் தட்டினாள். பல்லக்குக்காரர்கள் ஓடோடியும் வந்தார்கள்.

"புறப்படலாமா...?" என்றாள் அவள்.

"சரி" யென்று பல்லக்குக்காரர்கள் தலையசைத்தார்கள்.

அவள் திரும்பிப் பல்லக்கில் ஏறினாள். இப்பொழுது அவளுடைய முகம் சாதுவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. கை தேர்ந்த சிற்பி வடித்தெடுத்த சிற்பம் உயிர் பெற்று வந்தது போல் இருந்தாள்.

அவள் ஏறிக்கொண்டவுடன், திரைகள் மூடப்பட்டு பல்லக்கு புறப்பட்டது. ஏலேலோ பாட்டு எதிரொலிக்க பல்லக்கு சென்று கொண்டிருந்தது. பல்லக்கு சிறிது தூரம் செல்லும்வரையில் காத்திருந்த நிர்மலானந்தர், அந்த மண்டபத்திலிருந்து ஏதாவது ரகசிய வழி செல்லுகிறதா வென்று ஆராய்ந்தார். ஒரு வழியும் அவருடைய கண்களுக்குப் புலப்படவில்லை. பல்லக்கில் ஏறிச் செல்லும் பெண்ணைப்பற்றிய விவரம் தெரியாமல் பல்லக்கை விட்டுவிடவும் அவருக்கு இஷ்டமில்லை. ஆகவே மண்டபத்தைப் பற்றிய ஆராய்ச்சியை அப்படியே விட்டுவிட்டு, பல்லக்கை சிறிது தூரத்தில் பின் தொடர்ந்தார்.

பல்லக்கு நகரத்தின் தெருக்கள் வழியாகச் சென்றுகொண்டிருந்தது. சந்திரன் வெளுத்துப் போய் சூரியனின் வருகையை அறிவித்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணின் அழகிய முகம் மனத்திரையில் அழியாமல் நிற்க, நிர்மலானந்தரும் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்.

சேவல்கள் கூவின. பஜனைப் பாடல்கள் ஒலித்தன. பல்லக்கு நகரின் கோடிக்கு வந்து அழகான மாளிகையொன்றின் முன் நின்றது. பல்லக்கிலிருந்து அந்த அழகி இறங்கி, மூன்று முறை கதவைத் தட்டினாள். கதவும் திறந்தது. அவள் வீட்டினுள் நுழைந்தவுடன் கதவு மூடிக் கொண்டது. பல்லக்குக்காரர்கள் காலியான பல்லக்கைத் தூக்கிக்கொண்டு நடந்தனர்.

அதற்குமேல் என்ன செய்வதென்று நிர்மலானந்தருக்கு விளங்கவில்லை. ஒன்றும் புரியாமல் தெருவில் மேலும் கீழும் நடந்தார். தெருவெங்கும் இன்னிசை முழங்கிக்கொண்டிருந்தது. சதங்கைகளின் ஓசை 'கலீர் கலீர்' என ஒலித்தது. நிர்மலானந்தரால் எதையும் நிதானிக்க முடியவில்லை. அந்தப் பெண்ணின் முகத்தை எப்படியும் மற்றொரு முறை கண்டு களித்திட வேண்டுமென்ற எண்ணத்தில் அவள் மாளிகையை நோக்கி நடந்தார். வாயிற்படியில் ஏறி, கதவைத் தட்ட நினைத்தார். எதற்காக கதவைத் தட்டினீர்கள் என்று கேட்டால் என்ன சொல்லுவது என்ற அச்சம் தோன்றியது. சிறிது நேரம் தாமதித்தார். நிலவொளியில் தோன்றிய அந்த முகம் மீண்டும் அவருடைய மனக் கண்முன் காட்சியளித்தது. கைகள் அவரை யறியாமலேயே 'படபட' வென்று கதவைத் தட்டின. கதவு திறக்கப்படும் தாழ்ப்பாள் ஓசைகேட்டபோது தான் தான் செய்த தவறினை உணர்ந்தார்!

மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் பிராணியைப் பார்த்திருக்கிறீர்களா?

அப்படிப்பட்ட விலாங்குகள் அரசியலிலும்கூட இருக்கிறார்கள்!

இவர்கள் தமிழ் நாட்டிலே இருந்துகொண்டு "தேவிகுளம்-பீர்மேடு தமிழகத்துக்கே சொந்தம்!"—என்று கோஷமிடுவார்கள்!

அதே நபர் கேரளத்திலே சொல்மாரி பொழிய நேர்ந்தால் "யார் சொன்னது தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுக்குத்தான் சொந்தமென்று? அவை

# அவர்கள் 'அரசியல் விலாங்குகள்'!

கேரளத்தின் உடமையல்லவா? உயிர் கொடுத்தாவது தேவிகுளம், பீர்மேட்டை மீட்டே திருவோம்!" என்று உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போதிலும் அச்சமில்லை; அச்சமில்லை-என்று முழங்கிக் காட்டுவார்கள்!

—இந்த 'விலாங்கு வேலை'யை வைத்துக் கொண்டே சில அரசியல் கட்சிகள் 'ஆல் இந்தியா மார்க்'கைக் குத்திக் கொண்டு வலம் வந்து கொண்டிருக்கின்றன.

இவர்களுக்குத் துணிவு அதிகம்; மிக மிக அதிகம்!

முதல் நாள் 'முதலாளித்துவம் ஒழிக! முதலாளிக்கு வால் பிடிக்கும் 'கூட்டம் ஒழிக!'—என்று கோஷமிட்டு; பத்திரிகை அலுவலகம் சென்றவுடன் 'சேலம் மாக்னசைட் தொழிலை ஒரு அன்னிய முதலாளியிடம் ஒப்படைப்பதா? கூடாது; கூடாது—ஒன்று அதை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும்; அல்லது தமிழ் நாட்டு முதலாளிகள் யாரேனும் முன் வந்து தமிழ் நாட்டுத் தொழிலை வளப்படுத்துவதற்கு முன் வரவேண்டும்'—என்று சுடச்சுட எழுதுவார்கள்.

அந்த ஒருக் கணத்தில் ஏக பாரத சுதியை விட்டுவிட்டு; கொஞ்சமும் சங்கோஜப்படாமல் தமிழ் நாட்டு முதலாளிகள் என்கிற குறுகிய மனப்பான்மையோடு அரசியல் பல்லவியைப் பாடுவதற்குத் துவங்கிவிடுவார்கள்!

பாவம்; அகில இந்தியாவிற்கும் ஒரு கட்சியை அமைத்துக் கொண்டு; வளர்ந்துவரும் தேசிய உணர்ச்சிக்குப் பரிந்து கொடுக்காவிட்டால் சரிந்து போக நேரிடுமே—என்று கவலைப்பட்டுக் கொண்டு; மாநிலத்துக்கும் மக்களது மனப் பண்புக்கும் தக்கபடி கொள்கையை வளைத்தும்; நெளித்தும்; ஒடித்தும்; ஒட்டியும் வாழ்க்கை நடத்துகிறது அந்த இயக்கம்!

இந்தக் கிழமை பத்திரிகையைப் புரட்டினால் மீண்டும் அவர்களது பச்சோந்தி மனப்பான்மைதான் குன்றின் மேலிட்ட ஒளி விளக்குபோல் பிரகாசிப்பது தெரிகிறது.

'இந்தி வேண்டாம்'— இந்த கோஷமும் எதிர்ப்பும் சற்றும் எதிர்பார்க்காத இடங்களிலிருந்தெல்லாம் கிளம்பி வருகின்றன!

முன்பு வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எவ்வளவு எதிர்ப்பு உருவாகியதோ, அதைப் போலவே காஷ்மீர் முதல் கன்யாகுமரிவரை இந்தி பேசப்படாத அத்தனை மாநிலங்களிலும் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எதிர்ப்பு அணி உருவாகி வருகிறது!

முன்பு ஒரு காலத்தில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் இந்தி பொது மொழியாவதை வன்மையாகக் கண்டிக்கிறார்!

அதைப் போலவே இந்த அக்டோபர் 16–ந் தேதியிட்ட அறிக்கை யொன்று கூறுவதைப் படியுங்கள்:

"ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்த நேரத்தில் இந்தியை ஆட்சி மொழியாகவும், உயர்தரக் கல்வி போதனமொழியாகவும் ஆக்குவது, இந்தியாவின் சிறந்த நலன்களுக்கு மிகுந்த ஊறு தேடுவதாகும் என்று நாங்கள் கருதுகிறோம்.

"ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைப் புகுத்துவதினால் இந்தி பேசாத மக்கள்தான் அதிகமான கஷ்டங்களுக்கு ஆளாவர்; எனவே, இந்தி பேசாத மக்கள்தான், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை வைத்துக் கொள்ளலாமா, கூடாதா-என்பதையும், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை வைத்துக் கொள்ளலாம் என்றால் எப்போது—எப்படி என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.

"மக்கள் சபையின் பெரும்பான்மை வாக்கு பலத்தால் இந்தியைத் திணிப்பதைவிட, இதுபோன்ற சிநேக பாவத்துடன் விட்டுக் கொடுக்கும் மனோபாவம்தான், தேசீய ஐக்கியத்திற்காக இன்று தேவைப்படுகிறது."

—இந்த அறிக்கையிலே கையெழுத்துப் போட்டிருப்பவர்கள் யார்?

சி. பி. ராமசாமி (அய்யர்), மிர்ஜா எம். இஸ்மாயில், 'பி. கோதண்ட ராவ்—போன்ற பிரமுகர்கள்!

இப்படி இந்தியை எதிர்த்து பலமுனைகளிலிருந்து எதிர்ப்புக் கணைகள் தொடுக்கப்படுகிற இந்த நேரத்திலேதான்; மன்மதன் வடிவமெடுத்து அதன் மீது மலர்க் கணை தொடுக்க முற்பட்டிருக்கிறார் ஒருவர்!

அவரது பேச்சின் கருப்பொருளைப் படியுங்கள்:

"மாநிலங்களுக்கிடையே தொடர்பு, மத்திய சர்க்கார் நிர்வாகம் இவற்றிற்கு ஆட்சி மொழியாக ஏதை உபயோகிப்பது என்பதும், ஆங்கிலத்தையே தொடர்ந்து நீடிக்கலாமா என்பதும் பிரச்சினை; ஆனால், தேவைப்படுகிற காலத்திற்குமேல் ஒரு கணம் கூட நாம் ஆங்கிலத்தை வைத்துக் கொள்ள முடியாது; ஏனெனில் அது அன்னியரின்—ஆதிக்கக்காரரின் மொழி.

"மாநிலங்களுக்கிடையே ஒரே தொடர்பு கொள்ளும் மொழியாகவும் இந்தியாவின் தேசிய மொழியாகவும் இந்திதான் இருக்க வேண்டும்; இந்திக்கு உள்ள அந்த உரிமையை யாரும் மறுத்துரைக்க முடியாது!"

யார் இந்தப் பெரிய மனிதர்? ஆச்சாரியார் எதிர்க்கிறார்; சி. பி. ராமசாமி (அய்யர்), எதிர்க்கிறார்; மிர்ஜா எம். இஸ்மாயில் எதிர்க்கிறார்; பி. கோதண்டராவ் எதிர்க்கிறார்! ஆனால் இவர் மட்டும் ஆதரித்து; இந்தி என்னும் மந்தி அலங்காரியைக் கட்டித் தழுவுவானேன்? அந்த அதிசய மனிதர் யார்? யார் அவர்?

—இப்படிக் கேட்கத் தூண்டும் பலருக்கு!

அவர் வேறு யாருமல்ல; கேரளத்து முதல் அமைச்சர் நம்பூதிரிபாட்தான்! அவர்தான் மதுரை மாநகரிலே இந்த உன்னதப் பொன் மொழியை உதிர்த்திருக்கிறார்.

இது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலே தேசிய மொழிக் கொள்கைபற்றிய நிறம் நெ. 1.

நம்பூதிரியாரின் இந்தப் பேச்சுக்கு மறுப்பு கொடுக்கும் விதத்தில் புதுடில்லியில் கூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி தீப்பொறி பறக்கும் பல தீர்மானங்களைத் தீட்டியிருக்கிறது.

அவற்றுள் இந்தி மொழியைப் பற்றிய தீர்மானமும் ஒன்று. அந்தத் தீர்மானத்தின் நகலைப் படியுங்கள்:

"இப் பிரச்சினையை அரசாங்க மொழிக் கமிஷன் அணுகியுள்ள விதம் அடிப்படையிலேயே தவறானது. லட்சக் கணக்கான மக்களால் பேசப்படும் பல மொழிகளைக் கொண்டது நம்நாடு என்பதை, கமிஷன் சிந்திக்கத் தவறி விட்டது. இந்தியை எவ்வளவு துரிதமாக அரசாங்க மொழியாக்கலாம் என்பதில் ஒன்று மட்டுமே அது கவனம் செலுத்தியிருக்கிறது. பிரதேச மொழிகள் விஷயத்தில் காட்டப்படும் போக்கு குரோதத்தைப் பரப்பி, நேச ஒற்றுமையை பலவீனப்படுத்திவிடக்கூடும். ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியா பூராவுக்கும் ஒரு தேசியமொழி தேவையே என்றாலும், இந்தியைத் திணிக்க முயற்சி செய்வது தவறு,"

"மாநிலங்களுக்கு இடையே, தொடர்பு கொள்ளும் மொழியாகவும்; இந்தியாவின் தேசிய மொழியாகவும் இந்திதான் இருக்க வேண்டும்; இந்திக்கு உள்ள அந்த உரிமையை யாரும் மறுத்துரைக்க முடியாது!"

[தொடர்ச்சி பக்கம்—10]

## உதை வாங்கப் போகிறான்!

★

நகைச்சுவை அரசர் என். எஸ். கே. யுடன் பேசிக் கொண்டிருப்பதிலே ஒரு தனி இன்பம்! பலப் பல நகைச்சுவைகள் அவர் பேச்சின்போது உதிரும். அதில் ஒன்று அவர் சொன்னதாவது:

நடுராத்திரியில் ஒரு சாராயக் கடைக்குள் ஒருவன் புகுந்தானாம். கடை பூட்டும் சமயம். புகுந்தவன் ஒரு துலாம் சாராயம் கேட்டானாம். கடைக்காரன் "நேரமாகி விட்டது; கடை பூட்டி விட்டேன்!" என்றானாம்.

"அய்யா! அய்யா! நான் உதை வாங்கப் போகவேண்டும்—உடம்பு வலி தெரியாமலிருக்க, ஒரு துலாம் சாராயம் கொடு" என்று கெஞ்சினானாம் வந்தவன்.

கடைக்காரன் இரக்கப்பட்டு, கடையைத் திறந்து ஒரு துலாம் சாராயம் கொடுத்தானாம். அதைக் குடித்து விட்டு மறுபடியும் கேட்டானாம். அவன் கொடுத்தான். இப்படியே பல துலாம்கள் குடித்துவிட்டு கடைசியாக, "அய்யா! நான் நிறைய உதை வாங்க வேண்டும்; ஒரு பாட்டிலாகவே சாராயம் கொடு," என்று வாங்கி அதையும் குடித்தானாம். கடைக்காரன் அவனிடம், "ஏனடா! எங்கே போய் உதை வாங்கப் போகிறாய்?" என்று ஆவலுடன் கேட்டானாம். வந்தவன், "இங்கேதான் உதை வாங்கப் போகிறேன்—ஏனென்றால் சாராயத்திற்கு நான் காசு கொண்டு வரவில்லை," என்று பதில் சொன்னானாம்.

— 'முரசொலி' (30—7—54)

# அவர்கள் அரசியல் விலாங்குகள்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

—நம்பூதிரியாரின் ஆணித்தரமான பேச்சு, இது!

"ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியா பூராவிற்கும் ஒரு தேசிய மொழி தேவையே என்ருலும் இந்தியைத் திணிக்க முயற்சி செய்வது தவறு."

—இது நம்பூதிரியார் அங்கம் வகிக்கும் அகில இந்தியக் கம்யூனிஸட் கட்சியின் மத்தியக் கமிட்டி திட்டியுள்ள தீர்மானம்!

—இது நம்பூதிரியாருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே நிலவிவரும் குழப்பத்தை மட்டுமல்ல; தென்னுட்டின் ஒரு கோடியிலே இருக்கும் கேரளத்திற்கும்; ஆச்சாரியார் முன்பு ஒருமுறை குறிப்பிட்டதைப் போல 'தூரத்திலிருக்கும்' டெல்லிக்கும் இடையே நிலவும் முரண்பாட்டையும் விளக்குவதாக இருக்கிறது!

பிரச்சினைகள் வருமென்று காத்திருப்பதல்ல; பிரச்சினைகளைத் தானே உண்டு பண்ணிக் கொண்டு அதற்குப் பரிகாரம் தேட முனைவதுதான் அரசியல்வாதியின் லட்சணம்.

—இந்தப் பழமொழி உண்மையாஞல் இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர்கள் நமது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள்தான்!

நோயையும் அவர்களே ஏற்படுத்துவார்கள்; பிறகு மருந்துப் பொட்டியைத் தூக்கிக் கொண்டு அவர்களே வைத்தியம் செய்யவும் வந்துவிடுவார்கள்!

இந்தி தேசிய மொழியாவதை மட்டுமா கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்திருக்கிறது? இல்லை; இல்லை! அதே நேரம் அது பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் வழி சொல்லியிருக்கிறது.

புதுடில்லிக் கமிட்டி கூறும் ஆலோசனைகளைப் படியுங்கள்:

எப்போது இந்தி ஒன்றே இந்திய யூனியனின் அரசாங்க மொழியாக வேண்டும் என்பது பின்னர் முடிவு செய்யப்பட வேண்டும். இடையில் இப்போதுபோலவே ஆங்கில உபயோகத்துக்கு தடை இருக்கக் கூடாது. ராஜ்ய சட்டங்கள் யாவும் பிரதேச மொழியிலேயே இருக்கவேண்டும். ஹைக்கோர்ட் தீர்ப்புகளையும் விரைவில் பிரதேச மொழியிலேயே வெளியிட வேண்டும். எல்லா மொழி பெயர்ப்புகளும் மத்திய சர்க்கார் செலவாக இருக்க வேண்டும்.


வெளிவந்து விட்டது!

தோழர்

டி. கே. சீனிவாசன்

எழுதிய

★ குறள் ★

கொடுத்த குரல்

விலை ரூ. 1.

உங்கள் தேவைக்கு:—

சாந்தி நூலகம்,

2—112 பிராட்வே,

சென்னை—1


"இந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள மத்திய சர்க்கார் காரியாலயங்களில் இந்தி—ஆங்கிலத்துடன், பிரதேச மொழியையும் சேர்த்து உபயோகிக்க வேண்டும். எந்த இடத்திலாவது மொழி மைனாரிடியினர், ஜனத் தொகையில் 15 சதவிகிதத்திற்குமேல் இருந்தால், அங்கு மைனாரிடி மொழியையும் நிர்வாகக் காரியங்களுக்கு உபயோகிக்க வேண்டும்."

—பிராந்திய மொழிகளுக்காக இவ்வளவு வக்காலத்து வாங்கியிருக்கிறார்கள்! அவற்றின் வளர்ச்சிக்காக தங்கள் கண்ணீரையே தண்ணீராகத் தந்திருக்கிறார்கள்!

—ஆமாம்; நிச்சயம் அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த யோசனைகளைப் படித்துவிட்டு அந்தந்தப் பிராந்திய மொழிக்காரர்கள் நிச்சயம் மனம் குளிரத்தான் செய்வார்கள்.

ஆனால் அதே நேரம் இந்தி மொழிக்காரர்களின் நிலை?

—இந்தத் தீர்மானம் கண்டு இந்தி மொழிக்காரர்கள் எதிராளிகளாக மாறி விடுவார்களே; அதற்கு என்ன செய்வது?

அரசியல் விலாங்குகளாயிற்றே இவர்கள்; சும்மாயிருப்பார்களா? அதற்கும் வழி வைத்திருக்கிறார்கள்:

"எல்லா ராஜ்யங்களிலும் பிரதேச மொழியே அந்தந்த ராஜ்யங்களில் அரசாங்க மொழியாகவும், கல்லூரிகளில் போதனு மொழியாகவும் இருக்க வேண்டும். இப்படிச் செய்தால் இந்தியை, இந்திய யூனியனின் அரசாங்க மொழியாக்குவதற்கு வேண்டிய சூழ்நிலையை அது தோற்றுவிக்கும்!"

—அகில இந்தியக் கமிட்டி தெரிவித்திருக்கும் யோசனைகளில் ஒன்றுதான் இது!

"ஏ, இந்திமொழிக்காரர்களே! நாங்கள் இப்போது இந்தி மொழி வேண்டாமென்று கூறுவதால் கோபித்துக் கொள்ளாதீர்கள்! பிராந்திய மொழிகள் வளர வேண்டும் என்று கூறுவதால் ஆத்திரப்படாதீர்கள்! அவர்கள் தலையில் 'ஐஸ்' வைத்தால் தான் நாம் பிறகு இந்தியைத் திணிக்க முடியும்!"

—அகில இந்தியக்கமிட்டியின் இந்த யோசனை மூலம் இதைத் தான் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிருர்கள்!

இந்தியைத் திணிப்பது தவரும்!

ஆனுல் அதே நேரம் பிராந்திய மொழிகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமாம்!

ஏன்?

அப்படிச் செய்தால்தான் 'இந்தியை, இந்திய யூனியனின் அரசாங்க மொழியாக்குவதற்கு வேண்டிய சூழ்நிலை'யைத் தோற்றுவிக்குமாம்!

—எவ்வளவு முரண்பாடுகள் பார்த்தீர்களா?

இவர்கள் சரியான 'அரசியல் விலாங்குகள்' என்பதற்கு இதைவிட வேறு நல்ல உதாரணம் என்ன வேண்டும்?

# பிறைவானம்....

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டியல் தயாரித்துக் கொண்டிருந்தார்கள்.

போட்டி நாள்! பள்ளிக்கூட மத்திய மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது!

பலர் பேசினுர்கள்!

அவ்வளவு பேரும் கோழைகள் போலும்! பகுத்தறிவு இருந்தும் பழமைக்குப் பயப்படும் 'படித்த முட்டாள்கள்' போலும் —'தீபாவளி தேவைதான்; அதைக் கொண்டாடாவிட்டால் தேவர்கள் கொடும் சாபம்விடுப்பர்' என்று 'அறிவுரை' கூறி இறங்கி விட்டார்கள்.

சூழ்ந்திருந்த பையன்கள் அத்தனை பேரும் கேலி செய்தார்கள்; கிண்டலாகச் சிரித்தார்கள்!

"அடுத்து விமலா பேசப் போகிருள்," என்று அறிவித்தார் தலைமை ஆசிரியர்!

மண்டபத்தில் சிறு சல சலப்பும், கணநேரத்தில் திடீர் அமைதியும் தோன்றியது.

"தீபாவளி தீய பண்டிகை; அறிவுக்கு ஒவ்வாத திருவிழா; நமக்கு வேண்டாமே அது!"



என்றல்லவா பேசப்போகிருள்; ஆதாரங்களையல்லவா அள்ளி வீசப்போகிருள்.

விமலா பேச ஆரம்பித்தாள்.

ஆனுல், அவளது குரல் ஏன் அப்படி நடுங்குகிறது?

விமலா பேசிக் கொண்டே போனுள். அத்தனை பேரும் திடீர் அதிர்ச்சியால் தாக்கப்பட்டவர்கள்போல் ஆனுர்கள்.

ஆமாம்; விமலா பேசுகிருள், நீங்களும்தான் கேளுங்களேன்:

"தீபாவளி கொண்டாடக் கூடாது; அது தேவையற்றது —"என்று யாராவது சொன்னுல் அவர்கள் முட்டாள்கள்! கடவுளை நிந்திப்பவர்கள்! ஆண்டவனின் திருவிளையாடல்களை—இருட்டு விளையாடல்கள்; தீயச் செயல்கள் என்று தூஷிப்பவர்கள்! அவர்கள் அழிந்து போவார்கள்!

"ஆகவே அன்புள்ள தோழிகளே! தோழர்களே! நாம் அனைவரும் புத்தாடை உடுத்துவோம்; பட்டாசுகள் கொளுத்துவோம்; பட்டணங்கள் புசிப்போம்; பாட்டிசைப்போம்; தீபாவளியை சிரித்துக் களித்துக்கொண்டாடுவோம்!

மண்டபத்தில் மயானஅமைதி நிலவியது! சுறு சுறுப்போடு கைதட்டத் தயாரான கரங்கள் சோர்ந்து விழுந்தன.

அடுத்து கண்ணன் ஏறினுன்.

குறுக்கே எழுந்து போய் விடக் கூடாதே என்பதற்காகவும், ஏதோ கடமைக்காகவும் அவன் பேச்சைக் கேட்டனர் அனைவரும்!

கண்ணன் பேசினுன்:

"ஒரு காலத்தில் ஒரு அரக்கன் உலகைப் பாயாகச் சுருட்டினுனும்—பூகோளம் படித்த தம்பிகளே! நீங்கள் நம்புகிறீர்களா, இதை? உருண்டையான உலகத்தைச் சுருட்ட முடியுமா? இப்படிச் செல்லும் தீபாவளிக் கதை நமக்குத் தேவையா?

சுருட்டிய உலகைக் கடலுக்குள் ஒளித்தானும்! உலகத்தில் ஒரு அங்கம்தானே கடல் — அப்புறம் இந்த புதுக் கடல் எங்கே வந்தது?

கண்ணன் கேள்விகள் கேட்டான்! இப்படி எண்ணற்ற கேள்விகள் கேட்டான்! தீபாவளியின் ஆபாசக் கதையை எடுத்துச் சொல்லி—ஆதாரத்தோடு பேசி— "தேவை தானு தீபாவளி?" என்று கேட்டான்!

சிலையாகி விட்டிருந்த தம்பி, தங்கைகள் அத்தனை பேரும் தங்களையும் மீறி கத்தி விட்டார்கள், "தேவையில்லை! எங்களுக்குத் தேவையில்லை!" என்று!

விமலா ஏன் தோற்றுள்? கண்ணனின் புத்தகத்திலேயிருந்து விழுந்ததே கடிதம் அதுதான் அவளைத் 'தோற்றுப்போ' என்று ஆணையிட்டது. அந்தக் கடிதம்:

"அன்புள்ள மகன் கண்ணனுக்கு, உன் அன்னை எழுதியது. மகனே! நீ படிக்க வழியின்றி — படிப்பை நிறுத்தி விடப் போகிருயோ என்று பயந்தேன்! கண்ணே, எப்படியாவது அந்த விவாதப் போட்டியில் வெற்றிபெற்று பரிசை வாங்கிவிடு! அதை வைத்துக் கொண்டு எப்படியாவது இந்த ஒரு ஆண்டையும் முடித்துவிடடா!......போட்டியில் வெற்றபெற நன்ருகத் தயார் செய்து கொள் மகனே!

—உன் அன்னை.

புரிகிறதா, எப்போதும் வெல்லும் விமலா இப்போது ஏன் தோற்ருள் என்று!

ஆயிரம், இரண்டாயிரம் சிறுவர் சிறுமியர் படிக்கும் பள்ளிக்கூடத்தில், 'புத்திசாலி' என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு சிலர்தானே இருப்பார்கள்? அதிலும் சிலர் சில வற்றில்தான் திறமைசாலிகளாக இருப்பார்கள்: ஆனல் அப்படியல்ல கண்ணனும் விமலாவும்! படிப்பில்; பழகும் பண்பில்; விளையாட்டில்; ஓவியத்தில் — எல்லாவற்றிலுமே இருவரும் வியக்கத்தக்க அளவுக்கு திறமைசாலிகளாக இருந்தார்கள்!

கண்ணனுக்குக் கணிதத்தில் தொண்ணூறு மார்க் என்றல் —விமலாவுக்கு என்பத்து ஒன்பது நிச்சயம்!

விமலாவுக்குத் தோட்டவேலையில் தொண்ணூறு மார்க் என்றல் — என்பத்து ஒன்பது மார்க் கண்ணன் பெற்றிருப்பான்!

ஆனல் இருவருக்கும் ஒரே ஒரு வித்தியாசம்—

விமலா வாயாடி;

கண்ணன் பரமசாது!

விமலாவைப் பேச்சில்வென்று விடுவது என்பது ஆற்று மணலை எண்ணி விடுவதற்கு ஒப்பாகும். எந்த வம்பனும், வாயாடியும் அவள் முன் நிற்க முடியாது! 'பட பட'வென்று நிறுத்தாமல் பொரிந்து தள்ளி கடைசியில் தான் மூச்சு விடுவாள்! "அப்பப்பா!......பெண்களுக்கு இவ்வளவு நீளம் வாய் உதவாதுடி!" என்று யாராவது முணுமுணுத்தாலும் போதும்; விமலா சும்மா விட்டுவிட மாட்டாள்! சரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டிட், இராமாமிர்தத்தம்மையார்...என்று ஒரு பட்டியலையே எடுத்து நீட்டி, "இவர்களை எல்லாம் உனக்குத் தெரியுமாடி, ஊமையே!' என்று முத்தாய்ப்பு வைப்பாள்!

கண்ணன் இதற்கு நேர் மாருனவன்; வாயிருந்தும் ஊமை! 'துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு!' என்பார்கள்; ஆனல் 'வாயாடிகளைக் கண்டால் ஓடிப் போ!' என்ற புது மொழியைக் கடைப்பிடிப்பவன் அவன். 'மௌன விரதம்' கொண்டே காரியத்தில் வெற்றி காண்பவன்!

ஆனல், இந்த இரு கூரிய மதிகளையும் எடைபோடும் நாள் ஒன்று வந்தது பள்ளியில்!

பள்ளியிலுள்ள தமிழ் மன்றத்தார் ஒரு விவாதப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தார்கள். போட்டியில் வெற்றி அடைபவருக்கு ரூபாய் நூறு பரிசு என்றும் அறிவித்திருந்தார்கள், தமிழ் மன்றத்தார்! இத்தகைய போட்டிகள் வழக்கமாக நடைபெறுவதுண்டு. ஆனல் இம்முறை அது மிக மிக பரபரப்புடன் தலையைக் காட்டிற்று! ஏன் தெரியுமா? விவாதத்திற்கெனத் தரப்பட்டிருந்த தலைப்பு அத்தகையது!

தீபாவளி, ஏன்?

தலைப்பைவிட மற்றுமொரு திகைக்க வைக்கும் செய்தி— இம்முறை போட்டியில் கண்ணனும் கலந்து கொள்ளப் போகிருனும்! பள்ளி மாணவர்கள்— மாணவிகள்—ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் வியப்பையும், குறிப்பாக விமலாவுக்குப் பெரும் அதிர்ச்சியையும் தந்தது இந்தச் செய்தி! வழக்கமாக பேச்சுப் போட்டி என்றல் எத்தனை பேர் கலந்து கொண்டாலும், வெற்றி என்னவோ விமலாவுக்குத்தான் அன்று வரை கிடைத்து வந்தது! ஆனல், இந்த முறை 'பள்ளியின் முதல்வ'னுன கண்ணன் இதில் ஏன் குறுக்கிட வேண்டும்?

"அடி விமலா! என்னடி இது அதிசயம்! அந்த ஊமை உன்னேடு போட்டிக்கு வருதாமேடி!"

"எனக்கென்னடி தேவி, பயம்? ஊமையா இருந்தால் என்ன; உளறுவாயாத்தான் இருந்தால் என்ன?...என்னேடு போட்டிக்கு வந்தால் முகத்திலே கரி பூசிக் கொண்டு மூலைக்குப் போக வேண்டியது தானே!..."

"பின்னே என்னடி அக்கிரமம்! தீபாவளியைப்பற்றி அந்தக் கண்ணனுக்கு என்னடி தெரியும்? இதென்னடி சடுகுடா; அல்லது புட் பாலா? ஓடியாடி கும்மாளம் போடறதுக்கு!..."

"விணே எதுக்குடி நமக்குள்ள இந்த வாக்குவாதம்? கண்ணன் வந்தால்தான் என்ன; அவனுக்கு அண்ணன் பலராமனே வந்தால்தான் என்ன; பரிசு என்னவோ நம்ம விமலாவுக்குத் தானே!"

—இப்படிப் பள்ளித் தோழிகள் 'ஏகமனதாக' முடிவு செய்துவிட்டார்கள் என்றலும் —தனது வெற்றியிலே விமலாவுக்க அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது என்றலும் —கண்ணனின் போட்டிப் பிரவேசத்தின் காரணத்தை அறிய அவள் துடித்தாள்!

"ஏண்டி விமலா! நீ என்ன தீபாவளி தேவை என்று பேசப் போகிருயா?......அல்லது......"

"இதென்ன கேள்வி, தேவி? யோசித்துப் பார்த்தால் நாம் எப்படி தீபாவளி தேவைஎன்று சொல்ல முடியும்? அந்த ஆபாசக் கதையை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், நமக்கு படிப்பு எதற்கு? பகுத்தறிவு என்ன மண்ணுக்கு? செயற்கை சந்திரன் பவனி வருகிறகாலமடி இது! நம் பள்ளிக்கூடத்திலேயே நூற்றிலே ஒருவராவது தீபாவளி தேவை என்று சொன்னல் அது பட்சணத்திற்கும்— பட்டாசுக் கட்டுகளுக்குமாகத் தான் இருக்கும்! நான், தீபாவளி தீய பண்டிகை; அதைத் தீதென ஒதுக்குவோம் என்று தான் பேசப் போகிறேன்!"

"சபாஷ்! நானும் அதைத் தான் சொல்ல வந்தேன். நீ எங்கேயாவது புதுச் சட்டை, பாவாடையை மனதில் நினைத்துக் கொண்டு 'வருக, வருக! தீபாவளியே!' என்று பாராக்குக் கூறிவிடப் போகிருயோ என்று பயந்து கொண்டிருந்தேன் நான்!..."

"நல்ல கதை போ! எனக்கென்ன வெட்கமில்லையா? இந்த முறை என்ன அழகாகப் பேசி பரிசைத் தட்டிக்கொண்டு போகிறேன் பார்!..."

'விமலா தீபாவளி தேவை இல்லை—என்று பேசப் போகிருள் என்ற செய்தி பள்ளி எங்கும் பரவி விட்டது!

விமலாவின் பேச்சுக்குப் பதிலளித்து—"தீபாவளி தேவை தான்!" என்று வாதிட ஒரு பையனே, பெண்ணே அத்தனை பெரிய பள்ளிக்கூடத்தில்கிடைப்பார்களா என்று சிலர் தேடினர்கள். ஆனல் ஒரு குரலாவது 'இதோ, நான் இருக்கிறேன்' என்று துணிந்து எழும்பவேண்டுமே! அந்த தைரியம் யாருக்குமே இல்லையா?

ஆனல்......

கண்ணன் ஒருவன் விமலாவின் வெற்றிக்குக் காளானுக முளைத்து விட்டிருக்கிருனே! அவன் எதைப்பற்றிப் பேசப் போகிருன்? தீபாவளி வேண்டும் என்றே; இல்லை என்றே? இந்த சந்தேகம் விமலாவின் நெஞ்சில் எழும்ப பள்ளியை விட்டு வீட்டை நோக்கி நடந்தாள். ஆனல் சற்றும் எதிர்பாராதவண்ணம் பள்ளி வாயிலில் கண்ணனை சந்தித்தாள்.

"ஏன் கண்ணு? தமிழ் மன்றத்திலே பேச்சுப் போட்டி நடக்க இருக்கிறதே; தெரியுமா? வழக்கம்போல் நான் கலந்து கொள்கிறேன்; தெரியுமா? நீயும் பேசப் போகிருய் என்று பேசிக் கொள்ளுகிருர்களே; உண்மையா? அல்லது உன்னை பயமுறுத்த அப்படிச் சொல்லுகிருர்களா?...... உம்?......" என்று 'பட பட' வென்று விமலா கேட்ட இத்தனை கேள்விகளுக்கும்;

"கலந்து கொள்ளப் போகிறேன்!" என்ற ஒரே வரியில் பதில் சொல்லி விட்டு, வேறு திசையில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான் கண்ணன்.

"ஆமாம்; நான்தானே வழக்கமாகப் பரிசு பெறுபவள்! இத்தனைக்கும் நீ நான்கு பேர்களுக்கு மத்தியிலே வாயைத் திறக்கவே அஞ்சுவாயே? என்ன தைரியத்தில் இப்படி முடிவு செய்திருக்கிருய்?...போகட்டும்...தீபாவளி தேவை என்று பேசப் போகிருயா? தேவை இல்லை என்று பேசப் போகிருயா?"

"தேவை இல்லை என்று!..."

"அடடா; நான்கூட அப்படித்தான் பேசப் போகிறேன்!... என்னைவிட நீ நன்ருகப் பேசிப் பரிசு பெற்றுவிடலாம் என்று நினைக்கிருயா? இதுவரையில் உனக்குப் பேசிப் பழக்கமிருக்கிறதா?..."

—கண்ணன் வாயைத் திறக்கவில்லை; விமலாவின் வாயும் மூடவில்லை!

"பழக்கமில்லாதவர்கள் 'மைக்' முன்னல் நின்றல் உடல் முழுதும் நடுங்கும் என்று தெரியுமா உனக்கு?... ...போகட்டும்; தீபாவளி தேவையில்லை என்று பேசுவதாகச் சொன்னயே; அதற்கு என்ன ஆதாரங்கள் வைத்திருக்கிருய்? சும்மா நின்றுகொண்டு 'தேவையில்லை, தேவையில்லை!' என்று கத்தினல் ஒப்புக் கொள்வார்களா?..."

—விமலா பேசிக்கொண்டே இருந்தாள். கண்ணனல் பொறுக்க முடியவில்லை. ஆனல் பொறுமை இழந்து விடவும் இல்லை! அந்த இடத்தைவிட்டு வேகமாக நடந்து செல்ல ஆரம்பித்தான்!

ஆனல் அப்படிப் போகும் போது அவனது புத்தகம் ஒன்றிலிருந்து தவறி விழுந்த கடிதம் ஒன்றை அவன் கவனிக்கவில்லை. ஆனல் விமலாவின் விழிகள் அதைக் கவனித்து விட்டதோடு மட்டுமல்ல; அடுத்த கணத்தில் கைகள் அதை 'சட்'டென்று பற்றி எடுத்துக் கொண்டன! அப்புறம் ஆவல் சும்மா இருக்குமா? புத்தகத்தை விரித்து வைத்துப் படிப்பதுபோல் அவசர அவசரமாகப் படிக்க ஆரம்பித்தாள்!

ஆனல் கண்ணனிடம் பேசும் போது முகத்தில் தெறித்த கோபம்—கடிதத்தைப் படித்த போது தெரிந்த ஆர்வம்—அவை அனைத்தும் கடிதத்தைப் படித்து முடித்ததும் மாயமாய் மறைந்து விட்டது!

"ஏண்டி விமலா, அந்த ஊமை சிலை மாதிரி நிற்க— நீ 'அர்ச்சனை' பண்ணிக்கிட்டிருந்தியே என்னடி?..." என்று வழக்கம் போல் கிண்டல் செய்து கொண்டு பக்கத்தில் வந்த பள்ளித் தோழி தேவியைக்கூட அவள் கவனிக்கவில்லை—விமலா கண நேரத்தில் நெடுந் தூரம் கடந்து ஏதோ ஒரு யோசனை உலகத்திற்குப் போய்விட்டாள்!

தீபாவளி வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது போலவே போட்டி நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது!

நூறு ரூபாய் பரிசு கிடைத்ததும் விமலா என்னென்ன செய்ய வேண்டும்; தங்களுக்கு என்னென்ன வாங்கித் தர வேண்டும்—என்று தோழிகளே

[தொடர்ச்சி பக்கம்—10

## தீபாவளி ஏன்?

தம்பிகளே! தங்கைகளே!

**நீங்களே யோசித்துப் பார்த்தீர்களா?**

**தீபாவளி எதற்காக?**

★ பட்டாசுகள் ★ புத்தாடைகள் ★ பட்சணங்கள்

இவைகளுக்குத்தான் தீபாவளி என்று தானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

★

ஆனல், அந்தப் பண்டிகைக்குப் பின்னல் பதுங்கிக் கிடக்கும் உண்மைகள் தெரியுமா?

**ஒரே அபத்தம் — ஆபாசம் — அக்கிரமம்!**

அந்தக் கதை தெரிய இந்தக் கதையைப் படியுங்கள்!

எம். ஆர். கண்ணன்; அயன்புரம்

(?) டி. டீ. கே. இப்போது கம்யூனிஸ்ட் நாடுகள் உதவியளித்தால் வாங்கிக் கொள்வேன் என்கிறாரே; அவர் அந்த நாடுகளிடம் எப்படி உதவி கேட்பார்?

இது என்ன பிரமாதம்? தேர்தல் காலத்தில் ஓட்டு வாங்கப் போனபோது பேசியதைப் போலத்தான் பேச வேண்டும்! கம்யூனிஸ்ட் நாடுகளுக்குச் சென்று "நீங்கள் உதவியளிக்காவிட்டால் நாங்கள் பச்சை முதலாளித்துவத்தின் கைப் பிள்ளைகளாக மாறிவிடுவோம். திடீரென்று டாட்டாவும் பிர்லாவும் புரட்சி செய்ய ஆரம்பித்து; அவர்களுக்கு உதவியாக அமெரிக்காவும் டாங்கிகளை அனுப்பி வைத்தால் நாங்கள் பாதுகாப்புக்கு என்ன செய்வது? அதற்காகவாவது உதவி செய்யுங்கள்!" —இப்படித்தான் 'சுதி'யை மாற்றிக் கொண்டு அவர் உதவி கேட்பார்!

கே. ஜெகவீர பாண்டியன்;
மேலகற்கண்டார்கோட்டை

(?) ஒரு பெண் எம். எல். ஏ., தான் கண்ணகிபோல் போராடி சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவேன் என்கிறாரே; அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?

கண்ணகிபோல் போராடலாம். இது நேர்மை தவறாத பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக் களமாக இருந்தால்! ஆனால் இது கொடுமை தாண்டவமாடும் சோலைக் களமாக அல்லவோ இருக்கிறது! இங்கே எப்படி நீதி கிடைக்கும்?

பி. ஆர். பத்மநாதன்;
திரிகோணமலை—இலங்கை

(?) அமைச்சர் டி. டி. கே. யுக்கு 'கல்தா' கொடுக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி ஏன் உத்தரவு கொடுத்தது?

கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்டுக் கொண்டுதானே பண்டித நேரு டி. டி. கே. யுக்கு மந்திரி வேலை கொடுத்தார்! அதனால்தான்போலும் அப்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்!

எஸ். எஸ். கிருட்டிணமூர்த்தி;
காஞ்சிபுரம்

(?) சென்னையில் ஒரு வீட்டின் மீது 'கல்மழை' பொழிகிறதாமே?

ஆமாம்; ஒரு வேளை அந்த நபர் சங்கீத வித்வானாயிருந்து இரவு பகல் பாராது பாடிக் கொண்டே இருந்திருக்கலாம். அதன் விளைவாகத்தான் ஒரு வேளை 'கல்மழை' பொழிகிறதோ, என்னவோ!

கே. ஆர். ராசசேகரன்;
திருவைகுண்டம்

(?) வெளிநாட்டு பிளேடு இறக்குமதியை இப்போது ஏன் தடை செய்து விட்டார்கள்?

ஆமாம்; வேடிக்கைதான்! வெளிநாட்டு பிளேடுகளைத் தடை செய்ய வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்னர் பாராளு மன்றத்திலே ஒரு உறுப்பினர் கூறியபோது, "நான் உள்நாட்டு பிளேடுகளை உபயோகித்து என் முகத்தைக் காயப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை," என்று உறுமினார், மொரார்ஜி தேசாய்! ஆனால் இப்போதோ வெளிநாட்டு பிளேடு இறக்குமதி தடைசெய்யப்பட்டிருக்கிறது! ஒரு வேளை, எல்லோரும் காயமாகி விடுமேயென்று பயந்து முகச் சவரம் செய்து கொள்ளாமல் தாடி வளர்த்துக் கொண்டால் அப்போதாவது, அவர்கள் 'தாண்டன்'களாக மாறி இந்தியை ஆதரிக்க மாட்டார்களா—என்று நினைக்கிறார்களோ, என்னவோ?

சி. ஏழுமலை;
புதுப்பேட்டை—சென்னை

(?) பண்டித நேரு இப்போது தென்னிந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் வருவாரா?

வரலாம்; ஏனெனில் வெளிநாடு சென்று திரும்பியதும் வழக்கமாக அகில இந்தியச் சுற்றுப் பயணம் செய்வது மரபு. இந்த முறை ஜப்பான் சென்று வந்த பிறகுமட்டும் சும்மாயிருப்பாரா என்ன?

வீ. த. கார்த்திகேயன்;
தோப்புத்துறை

(?) காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியின் பெயர் மாற்றத்தால் கிடைக்கும் பலன் என்ன?

தாங்களும் 'ஏகபாரதப் புதல்வர்கள்'தான் என்பதைப் பறை சாற்றிக் கொண்டு; தமிழ் நாட்டைப் பொறுத்த வரை 'அன்னியர்களாக' முற்பட்டிருக்கிறார்கள்!

வே. ப. சாமி; உத்தமப்பாளையம்

(?) கா. சீ. க. வின் இந்தி எதிர்ப்புக் கொள்கைக்கும், தி. மு. க. வின் இந்தி எதிர்ப்புக் கொள்கைக்கும் என்ன வித்யாசம்?

'இன்று போய் நாளை வா' என்கிறது கா. சீ. க! 'இன்றே போ; இனி என்றுமே திரும்பி வராதே' என்கிறது தி. மு. க.!

எஸ். எம். முகம்மது அனிபா;
கோவை

(?) நேருவும் காமராசரும் சந்தித்தால் எந்த மொழியில் பேசிக் கொள்வார்கள்?

எஜமானனும் அடிமையும் பேசிக் கொள்வதற்கு மொழி தேவையில்லை; கண் ஜாடையே போதுமானது!

மு. நலங்கிள்ளி; காருக்குறிச்சி

(?) தற்போது நமது மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காமராசர் மந்திரி சபை சரித்திரத்தில் இடம் பெறுமா?

இடம் பெறும்; சரித்திரத்திலே காந்தியாரும் இடம் பெறுவார் — அவரைக் கொன்ற கோட்சேயும் இடம் பெறுவான் என்பது உங்களுக்குத் தெரியாதா?

இரா. சின்னக்கண்ணு;
அத்திக்கோட்டை

(?) பலர் தி. மு. க.வை பகைத்துக் கொள்வானேன்?

குரங்குகளுக்குக் கூஜா தூக்கவா தெரியும்? கிழித்தெறியத்தான் தெரியும்!

(?) செயற்கைச் சந்திரன் மேலேயும் செல்லாமல்; கீழேயும் இறங்காமல் அந்தரத்தில் நிற்பானேன்?

இதுதான் தோழரே, 'திரிசங்கு சொர்க்கம்'!

கே. மாசிலாமணி;
தேனாம்பேட்டை—சென்னை

(?) பிச்சைக்காரர்களின் இலட்சியம் என்ன?

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்; இந்தியச் சுதந்திர பூமியில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடும்—இந்த 'உண்மை'களை ஊரறிய, பாரறியப் பரப்புவதுதான் நம் நாட்டுப் பிச்சைக்காரர்களின் இன்றைய இலட்சியம்!

எம். மல்லிகேசுவரி,
ராயபுரம்—சென்னை

(?) தங்கள் தலைமுடியை ஆண்டவனுக்குத் தருகிறார்களே சிலர்—ஏன்?

காசு செலவில்லாத காணிக்கை—கஞ்சர்கள்கூட துணிந்து கொடுக்கும் 'லஞ்சம்'—கொடுக்கக் கொடுக்கக் குறையாது வளருகின்ற ஒரே ஒரு பொருள்—அது ஒன்றுதானே சகோதரி!

பி. எம். கமலநாதன்;
நாரசிங்கன்பேட்டை

(?) உங்கள் ஏட்டில் ராசிபலன் எழுதுவீர்களா?

இதோ, உமக்கு இன்றைய பலன் —மாபெரும் ஏமாற்றம்.

மணியம்; மீஞ்சூர்

(?) சந்திர மண்டலத்தில் மக்கள் குடியேறி—தேர்தல் நடத்தி—மந்திரி சபை அமைத்தால்—அதிலே யாரார் இடம் பெறுவார்?

கண்டிப்பாக பக்தவத்சலருக்கு இடமிருக்கும்!

'சித்திரபுத்திரன்';
திருவைகுண்டம்

(?) ஆமாம்; நமது அரியலூர் அ... கேசனார் ஏன் இன்னும் கவர்னராகவில்லை?

வடக்கே இதுவரை எந்த க...னரும்.....வில்லையே!

**சந்தா விபரம்**

**உள் நாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6—50 |
| ஆறு மாதம் | 4—00 |

**வெளி நாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7—50 |
| ஆறு மாதம் | 4—50 |

## தாய்மொழி அறிவு...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்துஸ்தானியா? இந்தி என்றால் சமஸ்கிருதம் கலந்த இந்தியா; உருது கலந்த இந்தியா? அதிலும் தேவநாகிரி எழுத்திலா; பிற எழுத்துக்களிலா? இந்த ஆண்டிலேயே புகுத்துவதா; பத்து ஆண்டுகட்குப் பிறகு புகுத்துவதா?- என்பன போன்ற கேள்விகட்கெல்லாம் அரசுக் கொலுவீற்றிருப்போர் சூழ்நிலைக்கும் சுற்றுச் சார்பிற்கும் ஏற்ப பதில் கூறி வருகின்றனரே தவிர, இதுவரை திட்டவட்டமான பதிலைத் தந்ததில்லை.

குழம்பிய குட்டையிலே மீன் பிடிக்க எண்ணும் இந்திய அரசாங்கத்தின் மொழிக் கொள்கை ஒரு முழுக் குழப்பம். அந்தக் குழப்பச் சந்தடியிலேயே வடவர் ஆதிக்கத்தை பலப் படுத்துவதற்கான வேலைகள் திறமையோடு செய்யப் படுகின்றன. அதன் விளைவுதான் ஏதேனும் ஒரு வடக்கத்தி மொழியை எப்படியாவது நாட்டில் புகுத்தி விடுவது என்பது! இதை உறுதியாக கடைசித் தமிழன் உடலில் குருதி ஓடும் வரை தன் முழுபலத்தால் தமிழகம் எதிர்க்கும். அதற்கான சூழ்நிலையை உருவாக்க, தமிழ்மொழியின் நலம்பேண தமிழகத்துக் கட்சிகள் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஓரணியில் திரள்வது நாட்டுக்கு நல்லது.

—நாஞ்சில் அன்பெழில்

காகித விலையேற்றத்தைக் கருதி
நவம்பர் 1௳ இதழ் முதல்
'முரசொலி'யின் விலை
16 புதுக் காசு

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும்; மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128 மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை-